வலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 29 புதன்கிழமை (13.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084

## செல்வங்கள், செழிப்புகளுக்கு மயங்கியே

# ஐ.நாவில் கால அவகாசம் வழங்க

# கூட்டமைப்பு முனைப்பு காட்டுகிறது

## நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

அரசுக்கு அனுசரணை வழங்குவதால் கிடைத்துள்ள செல்வச் செழிப்புக் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மயங்கியுள்ளது. அதனாலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அரசுக்கு மேலும் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றார்கள் என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### அரச அலுவலர்களுக்கான

## வாகன பெர்மிட் மீதான த்டைநீக்கம் - மங்கள



(கொழும்பு)

இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரச அலுவலர்களுக்கான தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் ஊடான வாகன 23☛

### ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு

## புதிய ஆட்சி அமைக்க மகிந்த ராஜபக்ஷ அழைப்பு



(கொழும்பு)

ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் புதிய ஆட்சியினை அமைக்க உதவி செய்ய வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத் 23☛

## அமைச்சரவைக் கூட்டத்தில்

### கையடக்கத் தொலைபேசிக்கு தடை

(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் அமைச்சர்களுக்கு கையடக்க தொலைபேசியை எடுத்து வருவது தடை செய்யப்பட்டுள்ளது என 23☛

### எதிர்வரும் 21, 22 ஆம் திகதி

## அலுகோசு பதவிக்கு நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

அலுகோசு பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அதி 02☛

## கூட்டமைப்பின் ஆதரவுடன் பட்ஜெட் 43 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### ஐ.ம.சுதந்திர முன்னணி, ஜே.வி.பி எதிராக வாக்களிப்பு

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 43 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது 119 வாக்குகள் ஆதரவாகவும், 76 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன ஆதரவாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய தரப்புக்கள் எதிராகவும் வாக்களித்திருந்தன.

வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு 02☛

### வடக்கில் ஆசிரியர்கள்

## கறுப்புப் பட்டியணிந்து அடையாள போராட்டம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் சேவையாளர் சங்கங்கள் இன்று புதன்கிழமை சுகவீன விடுவிப்புப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வடக்கு - கிழக் 23☛

### தொண்டைமானாறில்

## இளைஞன் சடலமாக மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு பின்பகுதி வீதியிலிருந்து இளைஞன் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் 23☛

## அபிவிருத்திக்காக ஒற்றுமைப்படுக

### ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

நாட்டின் விரைவான அபிவிருத்திக்கு இருக்கும் தடைகளை இல்லாமலாக்க அனைவரும் கட்சி பேதமின்றி 23☛

## பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு



(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் நேற்று செவ்வாய்க் கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுவதாக நிதி அமைச்சு 24☛

## அரசியல்தீர்வில் தோல்வியே பிரபாகரன் உருவாகக் காரணம்

### பாராளுமன்றில் இரா.சம்பந்தன்



(கொழும்பு)

அரசியல் தீர்வில் தோல்வி அடைந்த தன் காரணமாகவே யுத்தம் நடைபெற்றதோடு பிரபாகரன் உருவாக காரணமாகியது என பாராளுமன்றத்தில் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார். 23☛

## ஜெனிவாவில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக் கூடாது என்ற பிரேரணையை எடுக்க முதல்வர் மறுப்பு

### மாநகர சபையில் குழப்பம் ; அரசுக்கு ஆதரவு எனவும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என வலியுறுத்தும் பிரேரணையை சபையில் எடுக்கமாட்டேன் என யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தெரிவித்ததால் ஏனைய உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக முதல்வர் இலங்கை 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அலுகோசு பதவி...

காரி ஒருவர் இதனை தெரிவித்துள்ளார். அலுகோசு பதவிக்காக அமெரிக்கப் பிரஜை ஒருவர் உள்ளிட்ட 102 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இந்த விண்ணப்பங்களில் அமெரிக்க பிரஜையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவர் வெளிநாட்டவர் என்ற காரணத்தினாலேயே இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் அலுகோசு பதவிக்காக விண்ணப்பித்திருந்த 79 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நேர்முகப் பரீட்சையின் பின்னர் அலுகோசு பதவிக்கு இருவர் மாத்திரமே தெரிவுசெய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## கூட்டமைப்பின்...

செலவு திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் கடந்த ஐந்தாம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் கடந்த 6ம் திகதி ஆரம்பமாகி, நேற்று வரை நடைபெற்றன.

நேற்றைய வாக்கெடுப்பினைத் தொடர்ந்து இன்று முதல், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரையிலான 19 நாட்கள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதங்கள் நடைபெறவுள்ளன. இந்த விவாதங்களின் நிறைவில், ஏப்ரல் 5ம் திகதி மாலை வரவு-செலவு திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


## வான் விற்பனைக்கு



மிச்சுபிசி L3 -100 Model வான் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

077 203 0309, 077 818 5017



WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(மி-9072)


# குருநகரில் மீன்பிடி படகு திடீரென தீப்பற்றி எரிவு



(குருநகர்)

குருநகர் றெக்கிளமேசன் வீதியில் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ஏற்றி வைக்கப்பட்ட இயந்திரப் படகு ஒன்று நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

யாழ் மாநகர சபை தீயணைக்கும் படையினர் விரைந்து வந்து ஏனைய இடங்களுக்கு தீ பற்றாது தீயை அணைத்தனர். (ம-102, 106)

# தொழில் நாடும் இளைஞர், யுவதிகளை பதிவு செய்தல்

யாழ்ப்பாண மாவட்ட செயலக தொழில் நிலையம் பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழில் நாடும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தொழில் தேடுபவர்களுக்குமான பதிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தொழில் நாடுவோருக்கான பதிவுகள் நாளை மறுதினம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்வுள்ளன. (ம)

## ஜெனிவா பயணம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



### கலாநிதி சிதம்பரம் மோகன்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் முன்னாள் ஒருங்கிணைப்புச் செயலாளரும், யாழ் நண்பர்கள் அமைப்பின் தலைவரும், வட்டுக்கோட்டை விவசாய சம்மேளன தலைவருமான கலாநிதி **சிதம்பரம் மோகன் அவர்கள்** ஜெனிவா சர்வதேச மனித உரிமைப் பேரவையின் 40வது செயலமர்வில் கலந்து கொள்வதையிட்டு வாழ்த்துகின்றோம்.

- வட்டுக்கோட்டை கமத்தொழில் சம்மேளனம்
- யாழ் நண்பர்கள் அமைப்பு
- தென்னாசியாவுக்கான சிப்மன் அமைப்பு
- யாழ் நண்பர்களுக்கான ஐரோப்பிய கிளை, சுவிஸ்
- வடக்கு வாழ் இந்திய சமுதாயப் பேரவை, வவுனியா
- இலங்கை- யப்பான் நட்புறவிற்கான அமைப்பு

[7959]

# மரண அறிவித்தல்

**திருமதி புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு**

(ஓய்வுபெற்ற ஆசிரியை - சிங்கள மகா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)



பிறப்பு : 31.12.1927

இறப்பு : 12.03.2019

40/4, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (2019.03.12) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சாமுவேல் சிதம்பரப்பிள்ளை - புஸ்பம் ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான மண்டைதீவைச் சேர்ந்த அருணாசலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆசிரியர் கனகரத்தினம் ம.ம.வி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பராஜா மகேந்திரன் மற்றும் புஸ்பதேவி மனோரஞ்சிதம், புஸ்பாமிர்தம் மனோசக்தி, புஸ்பராகம் மனோலயம், காலஞ்சென்ற புஸ்பாலயம் மனோஞானம் மற்றும் சரோஜினி, பூவேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாநிதி ஈஸ்வரகாந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திரலோசினி (ஓய்வு பெற்ற ஆசிரியை - கனகரத்தினம் ம.ம.வி) மற்றும் லக்ஷ்மி காந்தி (ஆசிரியை, கொழும்பு அல்கிக்மா கல்லூரி), கதிர்காமநாதன் (கல்வி வலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் கண்ணுத்துரை, யாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருக்குமரன் (ஆசிரியர், நெல்லியடி மத்திய கல்லூரி), ஐங்கரன் (சிங்கப்பூர்), உமையாள் (அவுஸ்ரேலியா- முன்னாள் ஆசிரியை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கௌதமி (ஆசிரியை, ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி), தர்மினி (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), ஜனார்த்தன், ஜனனி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், டாருனியா, மிருனியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2019.03.14) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**40/2, கோவில் வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

(7961)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## வேலாயுதம் மகா வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

தலைவர் : திரு.தி.சந்திரசேகரன்

இடம் : வேலாயுதம் மகா வித்தியாலய பொது மண்டபம்

காலம் : 2019.03.24 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி

இவ்வருட நிர்வாக தெரிவுடன் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**வேலாயுதம் மகா வித்தியாலய**
**பழைய மாணவர் சங்கம்,**
**பருத்தித்துறை.**

**வீ.கணேசலிங்கம்,**
**செயலாளர்.**

(சி-5756)

## சாவகச்சேரி நகராட்சிமன்ற பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

எமது நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான பாவிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் உபகரணங்கள் 25.03.2019 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி மன்ற முன்றலில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும். ஏலத்தில் பொருட்களைப் பெற்றுக்கொள்பவர்கள் ஏலத்தொகையுடன் VAT,NBT வரியைச் சேர்த்து செலுத்தி பொருட்களை உடன் அப்புறப்படுத்த வேண்டும்.

<u>பொருட்களின் விபரம்</u>

01. கட்டுமானப் பொருட்கள் (கதவு, நிலை, யன்னல்கள்)
02. இரும்பிலான சுருக்கு கேற் வகைகள்
03. ஹயஸ் வான் ரயர்கள், சக்கரங்கள் (195R- 14C)
04. உழவு இயந்திர ரயர்கள்
05. வெற்று தார் பெரல்கள்
06. இலத்திரனியல் மற்றும் கணனியுடன் தொடர்புடைய பொருட்கள்
07. தளபாடங்கள்
08. காகிதாதிப் பொருட்கள்
09. நீர் இறைக்கும் இயந்திரங்கள்

மேலதிக விபரங்களை அலுவலக அறிவித்தல் பலகையிலும் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பொருட்களை பார்வையிட முடியும் ஏலவிற்பனை தொடர்பாக நகராட்சிமன்றம் எடுக்கும் முடிவே இறுதியானது.

**இராமநாதன் சிவமங்கை,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(சி-5766)

## பல்கலை.மாணவர்களின் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவாக வடக்கில் வாகனப் பேரணி ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவுள்ள எழுச்சி பேரணிக்கு ஆதரவு கோரி வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வாகனப் பேரணியொன்று நேற்று யாழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழின அழிப்பிற்கு நீதி கோரி எதிர்வரும் 16 ஆம் திகதி மாபெரும் எழுச்சிப் பேரணியொன்றை யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகம் முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந் நிலையில் இவ் எழுச்சி பேரணி தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆதரவைத் திரட்டும் நோக்கில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வாகனப் பவனியொன்றை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வாகனப்பேரணி யாழ்ப்பாணம் முழுவதும் சென்று அதனைத் தொடர்ந்து வவுனியா, கிளிநொச்சி மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை வலியுறுத்தி இலங்கைக்கு எதிராக மற்றுமொரு தீர்மானம்

### பிரிட்டன், ஜேர்மன், கனடா இணைவு

(கொழும்பு)

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, பிரித்தானியாவும் ஜேர்மனும் புதிய தீர்மானமொன்றை முன்வைத்துள்ளது.

இப்புதிய தீர்மானம் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்வைக்கப்பட்டுள்ளது.

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் இத்தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியா, ஜேர்மனுடன் இணைந்து இலங்கை தொடர்பான இத்தீர்மானத்தை கனடா, அயர்லாந்து, மொன்ரெனிக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் முன்வைத்துள்ளன.

இத்தீர்மானத்திற்கமைய 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடரில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன், 2015 இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் விரிவான அறிக்கை ஒன்றை 2021 மார்ச் மாதம், சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இது குறித்து பேரவையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை எடுத்துள்ள முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்புதிய தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## 'எல்லா வளமும் உண்டு; ஒற்றுமை மட்டும் இல்லை'

# இலங்கைத் தமிழன் வாழும்வரை தமிழை யாராலும் அழிக்க முடியாது

### நடிகர் விவேக் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் ஒற்றுமையாக இருந்தால், உலகில் அவர்களை யாராலும் எதுவும்செய்து விட முடியாதென தென்னிந்திய நகைச்சுவை நடிகர் விவேக் தெரிவித்தார்.

அத்தோடு, இந்த உலகில் கடைசி இலங்கைத் தமிழன் வாழும் வரை தமிழை யாராலும் அழிக்க முடியாதெனவும் அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்தரின் சிகாகோ உரையின் 125 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை குறிக்கும் வகையில் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விவேக் மேலும் தெரிவிக்கையில்,

2ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு பழைமைவாய்ந்த, தொன்மையான பூமி இலங்கையெனவும் குறிப்பிட்ட விவேக், சுமார் 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்த ஒரே பூமி இலங்கையென பெருமையுடன் குறிப்பிட்டார்.

மழைவளம், கனிம வளம், காற்று வளம், நீர் வளம், நில வளம், கடல் வளம் என எல்லா வளங்களையும் கொண்ட ஆசீர்வதிக்கப்பட்ட பூமியென்றால் அது இலங்கை பூமி மாத்திரமே என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான வளம் நிறைந்த நாட்டில் ஒற்றுமை மாத்திரம் இல்லாமல் உள்ளதென குறிப்பிட்ட விவேக், அதனை சரி செய்துவிட்டால் உலகில் இலங்கை மக்களை விஞ்சியவர்கள் யாரும் இருக்க முடியாதென அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக நியூசிலாந்தில் முதல் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக தமிழ் மக்களுக்கான நிலை மாறுகால நீதி வழங்கப்படவேண்டும் என்றும் இலங்கைக்கு காலஅவகாசம் வழங்காது கூடிய அழுத்தம் தரும் வகையிலான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நகர்த்தப்பட வேண்டுமென்றும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் எதிர்வரும் 16 ஆம்திகதி முன்னெடுக்கப்படும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நியூசிலாந்து தமிழ் அமைப் புக்களின் ஒன்றியத்தினரால் (FTANZ) நியூசிலாந்து ஒக்லன்ட் நகரிலுள்ள ஓரி சதுக்கத்தில் பேரணி இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் சிவவசந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஈழத்தமிழ் உறவுகளுக்காக நியூசிலாந்து நாட்டில் முதன் முதலாக மேற்கொள்ளப்படும் பேரணி இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு வசந்த கரன்னகொட கைதாவதை ஜனாதிபதி மைத்திரி தடுத்தார்

(கொழும்பு)

முன்னாள் கடற்படை தளபதி வசந்தகரன்னகொட கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிட்டார் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட தன்னை கைதுசெய்வதற்கு எதிராக சமர்ப்பித்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த ஏழாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக ஜனாதிபதி சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறையினர் மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது.

சட்டமொழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு சொலிசிற்றர் ஜெனரல் டபுல டி லிவெர வசந்த கரன்னகொடவிற்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளமை உட்பட அனைத்து விபரங்களையும் தெளிவுபடுத்தினார் என தகவல்கள் கிடைத்துள்ளன என கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதன்போது தான் நீதிக்கு குறுக்கே நிற்கப்போவதில்லை என ஜனாதிபதி சொலிசிற்றர் ஜெனரலிடம் தெரிவித்துள்ளார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் மார்ச் ஆறாம் திகதி வசந்த கரன்னகொட சார்பில் இலங்கையின் பிரபல வர்த்தக பிரமுகர்களான டிரான் அலஸ்ீம் டிலித் ஜெயவீரவும் ஜனாதிபதியைச் சந்தித்தனர் எனத் தெரிவித்துள்ள கொழும்பு டெலிகிராவ் இவர்கள் இருவரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது டிரான் அலசும் டிலித் ஜெயவீரவும் சிஐடியினர் வசந்த கரன்னகொடவை கைது செய்வதற்கு அனுமதிக்க வேண்டாம் என மன்றாடியுள்ளனர் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது.

வசந்த கரன்னகொட கைது செய்யப்பட்டால் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பாரதூர தன்மை காரணமாக அவருக்குப் பிணை கிடைக்காது என இருவரும் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட் டுள்ளது.

அவர்களிடம் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இது குறித்து பேசுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார் என்றும் இவர்களைச் சந்தித்த பின்னர் சட்டமா அதிபரைத் தொடர்புகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசந்த கரன்னகொடவை கைதுசெய்ய வேண்டும் என வற்புறுத்த வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## மாகாண உறுப்பினர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!



(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் மேல்மாகாண சபை உறுப்பினர் முஹம்மட் பாயிசின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் வீட்டின் பின் புறப் பகுதி சேதமடைந்துள்ளது.

ஜன்னல் வழியாக வீட்டினுள் குண்டு வீசப்பட்டதில் வீட்டின் பின்புறத்திலிருந்த மின் உபகரணங்கள் உள்ளிட்ட சில பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதுடன் மாகாண சபை உறுப்பினரிடம் முறைப்பாடொன்றையும் பதிவு செய்தனர்.

அரசியல் காழ்ப்புணர்வு காரணமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாகாண சபை உறுப்பினரை இலக்குவைத்து இதற்கு முன்னர் இரண்டு தடவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமுருகன் குணசிங்கம்



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமுருகன் குணசிங்கம் நேற்று (12.03.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மத்தியதாஸ் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வாணிச்சந்திரிகா, லாவண்யா (ஆசிரியர் - யா/கட்டைவேலி யார்க்கரை விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5768)

நெல்லியடி.

தகவல்:- குடும்பத்தினர்
077 076 1700

# நியூசிலாந்து இன்னிங்ஸ் வெற்றி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் வோக்னர், போல்ட் 'வேகத்தில்' மிரட்ட நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று தொடரைக் கைப்பற்றியது.

நியூசிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் வெலிங்டனில் நடந்தது.

முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 211, நியூசிலாந்து 432/6 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தன. நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில், பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மொஹமட் மிதுன் (25), சௌமியா சர்கார் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நடந்தது. போல்ட் 'வேகத்தில்' சௌமியா சர்கார் (28) ஆட்டமிழந்தார். மொஹமட் மிதுன் (47) அரை சத வாய்ப்பை இழந்தார். வோக்னரின் பந்துவீச்சில் லிட்டன் தாஸ் (1), தஜில் இஸ்லாம் (0) சிக்கினர். மற்றவர்கள் விரைவில் திரும்ப, பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் வோக்னா 5, போல்ட் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து, நியூசிலாந்து 2:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 16ஆம் திகதி கிறைஸ்ட்சேர்ச்சில் ஆரம்பமாகிறது.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# VACANCIES

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF ENGINEERING

Senior Professor/ Professor of **Computer Engineering/ Electrical and Electronic Engineering/Mechanical Engineering**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in ***Civil Engineering / Computer Engineering/ Electrical and Electronic Engineering/ **Mechanical Engineering/ ***Engineering Mathematics**

**Note 01:**
*For positions in **Civil Engineering** special consideration will be given to those who have sound knowledge in Geotechnical Engineering and Construction management.

**For positions in **Mechanical Engineering** special consideration will be given to those who have sound knowledge in Mechanical, Production and Process Engineering.

***For positions in **Engineering Mathematics,** special consideration will be given to those who have sound knowledge in Engineering Mathematics. Background in Engineering will be considered additional qualification.

## FACULTY OF SCIENCE

**Scientific Assistant Grade I/ Grade II**

**Note 02:**
For positions of Scientific Assistant special consideration will be given to those who have Special degree in **Computer Science** or **Information Communication Technology (ICT)** as one of the relevant subjects.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.139,175 – 11 x 2,925– 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13 x 2,700-152,450/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/-p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |
| Scientific Assistant Grade I | Rs.50,625-3 x 1,335-54,360 (EB) 55,965-14x1,335-74,655/-p.m |
| Scientific Assistant Grade II | Rs.48,385-19 x 690-61,495/-p.m |

**Note 03:**
The above salary scales for permanent positions are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016(v) dated 01.06.2018.

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i) Academic allowance

   | | |
   |---|---|
   | Senior Professor | - 167% |
   | Professor | - 162% |
   | Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
   | Lecturer (Unconfirmed) | - 131% |
   | Lecturer (Probationary) | - 115% |

   ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)

   iii) Monthly Compensatory Allowance- 45% (Only for Scientific Assistant Gr.I/Gr.II)

   iv) Additional monthly allowance – 20% (for all permanent post)
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**
I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

**Closing dates**
Application should reach us on or before as indicated below:

| | |
|---|---|
| **Post of Senior Professor/ Professor** | **-20.05.2019** |
| **Other posts** | **-23.04.2019** |

Applications and other documents for the Post of **Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. **Applications for the other posts,** completed applications along with certified copies of the statements of the Degrees should be sent to the **Deputy Registrar/Academic Establishments,** University of Jaffna, Sri Lanka.

* Applicants for the **Post of Professor** are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae

b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:
- Teaching, Scholarship and Academic Development
- Research, Scholarship and Creative Work
- Dissemination of Knowledge
- Awards, University, National and International Development Activities
  The Self Assessment should be prepared in accordance with the marking scheme, (issued with this document) giving details under each heading/sub heading.

c) Three copies each of the documents to support self assessment in:
- Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
- Research, Scholarship and Creative Work (Section 2.0)
- Dissemination of Knowledge (Section 3.1)
- Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self assessment. (Section 3.2 & 3.3)
  (Section 2.0 & 3.1 could be prepared as a separate document)

d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the **Deputy Registrar, Academic Establishments,** University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** position should submit **separate application** along with separate **Bank slip.** The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
**12.03.2019**

(C-5762)

## வீதித் தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண பெருந்திருவிழாவும் வண்ணையின் வசந்த விழாவும் எதிர்வரும் 2019.03.16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு 15.03.2019 ஆம் திகதி பிற்பகல் 4 மணியிலிருந்து 17.03.2019 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிவரை பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்தி தொடக்கம் ஆனைப்பந்திச் சந்தி வரை போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப் படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்துவதன் மூலம் ஒத்துழைப்பு நல்குமாறு முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார் எனவும் பருத்தித்துறை வீதியில் பயணிக்கும் வாகனங்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதியூடாகச் சென்று குறுக்குவீதியூடாக பருத்தித்துறை வீதியில் பயணிக்கலாம் எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.(5)


## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல. J/DS/BR/-472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2018 ஆம் ஆண்டு 31.08.2018 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2019) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2019 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(2018 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்).

உரிமையாளர்:-A.S.SURENDRAN

(கு-5757)

**இல. 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311**

**இல. 09, கன்னாதிட்டி,வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046**



## ஆயுள் பூராக ஆரோக்கியம்

மூட்டுவலி, முள்ளந்தண்டுப்பிரச்சினை, நடக்க முடியாத நிலைமை, தோள்மூட்டு உயர்த்த முடியாத நிலைமை, மாதவிடாய் ஒழுங்கின்மை, சினைமுட்டை இல்லாமை, கர்ப்பப்பை நீர்க்கட்டி, சூலகநீர்க்கட்டி (PCOS) அதனால் ஏற்படும் தைரொயிட் பிரச்சினை, உடற்பருமன், ovarian hyper-stimulation syndrome, கர்ப்பப்பையில் உள்ள கொழும்புக்கட்டிகள், மூலரோகம், குதமார்க்கத்தில் ஏற்படும் பிஸ்ரியுலா, சைனஸ், மாறாத புண் கண் மற்றும் பாரிசவாதம், தீராத சர்மவியாதிகள், குடற்புண்கள், இருமல் இவற்றுக்கு நவீன ஆயுர்வேத தொழில்நுட்பத்தினாலான நவீன சிகிச்சைகளுடன் சிறப்பான பாரம்பரிய சிகிச்சை வழங்கப்படுகின்றது.

**Dr.G.Sritharan B.S.M.S. (SL) M.Phil (Jaf.) PGD.in Ayurvedic surgery (Scholar) Kelany) Reg.no. 10093**
**Dr.(Mrs) S.Anpuchelvy B.S.M.S. (SL), M.D(S) (India) Reg.No.10434**

தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம். (7949)

**ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்**
65, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)



## வடமாகாண இளைஞர், யுவதிகளுக்கான கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான மாபெரும் இலவச கருத்தரங்கு



**இலகுவாக தொழில் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழில்துறைசார் கற்கைநெறிகள்**
- ஹோட்டல் முகாமைத்துவம்
- ஊடக அறிவிப்புத்துறை
- கணனிசார் கணக்கியல்
- ஆங்கிலம்
- சிங்களம்



போன்ற தொழில் துறைசார் கற்கைநெறிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இக்கற்கை நெறிகளினூடாக இலங்கை மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றியுமான விரிவான மாபெரும் கருத்தரங்கு. (7953)

**கருத்தரங்கானது முற்றிலும் இலவசம்...**

காலம்:- 16.03.2019 (சனிக்கிழமை) நேரம்:- காலை 9.00 மணிமுதல்
இடம்:- கலைத்தூது கலையகம், இல. 286, பிரதான வீதி, மடத்தடி சந்தி,யாழ்ப்பாணம். (எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக)

அனுமதிகள் முற்றிலும் இலவசம்

ஹில் கல்லூரி,இலவச அனுமதிகளுக்கு
070 550 6560, 077 675 7448


## 34 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் 48 ஆவது பிறந்தநாளும்

தாயின் மடியில்
27 04 1971

ஆண்டவன் அடியில்
13 03 1985



### அமரர் துரைசிங்கம் சரவணன்துரை
(அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)

பாசத்தின் திருமகனாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
மனம் மகிழ நீ பிறந்தாய் ஆசை மகனே!
அன்பு மொழி பேசி அறிவொளி பரப்பி
கல்வியிலே சிறந்து கலைகள் பயின்ற நீ!
இன்ப நிழல் பரப்பி எமைக் காப்பாய் என்றிருந்தோம்
ஈரேழு வயதுதனில் இறைவனடி சேர்ந்தனையோ!
முப்பத்துநான்கு வருடங்கள் சென்றாலும் உன் முகம்
எம் நெஞ்சில் நிறைந்திருக்கும் என்றென்றும்
நாம் மறவோம்– நெஞ்சிருக்கும் வரையும் நினைவிருக்கும் சரவணா!

திருச்செந்தூர்,
நாவலம்பதி, அச்சுவேலி.

அப்பா, அம்மா,
பெரியம்மா குடும்பத்தினர். (7943)

## இராசி பலன்

13.03.2019
மாசி 29,புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சப்தமி பின்னிரவு 12.35 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.32 மணிவரை
சுபநேரம் 4.52-622 மணிவரை
இராகுகாலம் 12.22-1.52 மணிவரை

கிரகநிலை: ராகு; சூரி, புத; சுக்; சனி, குரு, கேது
சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், காலைப்பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர வழிபாட்டில் ஆர்வம் காட்ட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய வேண்டி ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**கடகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌவரமான நாள்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, களஸ்திர நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசில் ஈடுபாடு அதிரிக்கும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மகரம்:** எதிர்கால நலனில் அதிக அக்றை காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், நல்ல தகவல்கள் உங்களை நாடி வரலாம்.

**மீனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

வளவன்

# வடமாகாண விவசாய அமைச்சின் 812 திட்டங்கள் நிறைவேற்றம்

- ➢மாகாண விவசாய அமைச்சு 78 திட்டங்கள்.
- ➢விவசாயத் திணைக்களம் 154 திட்டங்கள்.
- ➢நீர்ப்பாசனத் திணைக்களம் 32 திட்டங்கள்
- ➢கால்நடைத் திணைக்களம் 501 திட்டங்கள்.
- ➢உள்ளக மீன்பிடிப் பிரிவு 47 திட்டங்கள்

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இவ் வருடம் ஆரம்பம் வரை 5 பிரிவுகளை உள்ளடக்கியதான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

வடமாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இவ் அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்றன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர், உறுப்பினர்களின் திட்ட ஒழுங்கமைப்பின் கீழ் 7 மில்லியன் ரூபா செலவில் 78 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் காளான் வளர்ப்பு, தூவல் நீர்ப்பாசனம், உவர் நிலப்பயிர் செய்கை, தேனி வளர்ப்பு, விதை நெல் உற்பத்தி, வெங்காயம், கொட்டில்கள் நெல் உலர்த்தும் தளங்கள், மேட்டு நிலப் பயிர் செய்கை, புகையிலை மாற்றீடு பயிர்ச்செய்கை, சூரிய நீர்ப்பம்பி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் 370 மில்லியன் ரூபா செலவில் 154 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் வினைத்திறனாக்குவதற்கும் விவசாயப் பிரதேசங்களை உள்ளடக்கிய குளங்கள், கால்வாய்கள், விவசாய வீதிகள் புனரமைக்க 705 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 32 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் கால்நடை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் சிறந்த பண்ணையாளர்களை உருவாக்குவதற்கும் 273 மில்லியன் ரூபா செலவில் சிறிய நடுத்தரக் கோழிப்பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள், திரவப் பால் நுகர்வு போன்ற 501 திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்தை தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் உள்ளக மீன்பிடிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு நன்னீர் குள மீன் குஞ்சுகள் வைப்பிடல்,இறால் குடம்பிகள் வைப்பிடல், நன்னீர் மீனவர்களுக்கான ஓடம், வள்ளம் வழங்கியமை ஆகிய திட்டங்களுக்கென 43 மில்லியன் ரூபா செலவில் 47 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# டிப்பர்-ஆட்டோ விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற ஆட்டோ-டிப்பர் விபத்தில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் வீதியில் கிடந்த சாரதியை வீதியால் பயணித்தவர்கள் அவரின் வேண்டுகோளுக்கு இணங்க சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 41வயது ஜனார்த்தனன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)

# யாழ். மெல்லிசை வாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இசைக்குழு கலைஞர் சங்கம் நடத்தும் "யாழ். மெல்லிசை வாசம்" நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்தி சங்கிலியன் பூங்கா.வளாகத்தில் யாழ். மாவட்ட இசைக்குழு கலைஞர் சங்கத் தலைவர் க.குமணன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக உலகத் தமிழர்களின் அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத், முதன்மை விருந்தினராக உலகப் புகழ் இசையமைப்பாளர் அப்ஷராஸ் எம்.மோகன் ராஜ்,கௌரவ விருந்தினர்களாக தியாகி அறக்கொடை நிறுவுநர் வி.தியாகராஜா, கலாபூஷணம் எஸ்.வி.முத்தழகு (தேசிய பாடகர்) தொழிலதிபர் ச.வின்சேத்தரராஜன், சிறப்பு விருந்தினர்களாக கலாபூஷணம் வி.கே. பஞ்சமூர்த்தி (உலகப் புகழ் நாத ஸ்வர இசையருவி) யாழ்.பல்கலைக் கழக முன்னாள் இசைத் துறைத் தலைவர் அ.அண்ணாமலை (பொப் பாடகர்) ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## போதைப்பொருளுக்கு எதிராக

# ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தால் எதிர்கால சமூகத்தைப் பாதுகாக்கலாம்

## வைத்திய நிபுணர் நளாயினி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

போதைக்கு எதிரான இயக்கம் தங்களையும், சமூகத்தையும், அதனோடு பாடசாலையினையும், வைத்தியசாலையினையும் இணைத்துக் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தால் அழிந்து போய்க் கொண்டிருக்கிற எதிர்கால சமூகத்தை பாதுகாக்கலாம் என பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் நளாயினி ஜெகதீசன் அழைப்பு விடுத்துள்ளார்.

மது போதைக்கு எதிரான இயக்கம் நடத்திய மகளிர் தின நிகழ்வும் சமூகத்திற்கு தலைமை தாங்கும் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வும் பருத்தித்துறை கிராமக்கோட்டு சந்தியில் உள்ள எஸ்.எஸ்.மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மது போதைக்கு எதிரான இயக்கத் தலைவர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய நிபுணர் மேலும் தெரிவிக்கையில்,

போர் எமக்கு முன்னே பூதாகரமாக இருந்தபோது யார் எதிரி என்று தெளிவாக தெரிந்தது. ஆனால் போதைப் போர் அப்படி அல்ல. மேடையில் இருப்பவனோ, எனக்கு முன்னால் இருப்பவனோ, பின்னால் இருப்பவனோ யார் எதிரி என கூறிக்கொள்ள முடியாத மாதிரி அந்த போதைப் போர் உருவாகியுள்ளது.

இதைப் பாவிப்போர் யார், கொண்டு வருவோர் யார், எவ்வாறு அது இளைய சமுதாயத்தை பாதிக்கிறது எனக் கண்டுபிடிக்க முடியாது உள்ளது. ஆனால் எல்லோரும் ஒற்றுமையாக முயன்றால் அது முடியும்.

போரால் ஒரு சமுதாயம்தான் அழிக்கப்பட்டது. போதையால் நிகழ்கால சமூகம் மட்டுமல்ல எமக்கு எதிர்காலமே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

போதைக்கு எதிரான இயக்கம் பருத்தித்துறையில் இயங்குவது இங்கு மூன்று வருடமாக சேவையாற்றிவரும் எனக்கு இன்றுதான் தெரிந்தது.

ஒரு இயக்கம் உருவாக்கம் என்பது அது அந்த சமுதாயத்தை போதையில் இருந்து ஒழிப்பதாகவே நான் நினைக்கிறேன். மகளிர் வைத்தியராக இருந்து கொண்டு சில அறிவுரைகளை கூறுகிறேன்.

போதைக்கு ஆட்பட்டு, அடிமையாக பாதிக்கப்பட்டுக் கொண்டு இருப்போர் இளைய சமூகத்தினர். அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியது பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர்களின் கடமை. அவர்கள் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.

ஏனெனில் வைத்தியசாலைக்கு வருவோரில் ஒருவரோ, இருவரோ போதையால் பாதிக்கப்பட்டவர்கள். 12,14,16 வயதுடைய மாணவப் பருவத்தினரும் 23, 25,30 வயதுக்கிடைப்பட்ட உழைக்கும் வயதினரும் போதையால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்படுகிறார்கள்.

போதைக்கு எதிரான இயக்கம் தனது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பாடசாலையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பாதிக்கப்படுகிறவர்கள் அங்கே இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு வருகிறார்கள். போதைக்கு எதிரான இயக்கம் சமூகத்தையும் அதனோடு பாடசாலையையும் வைத்தியசாலையையும் இணைத்துக் கொண்டால் போதைக்கு எதிரான இயக்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து அழிந்து போய்க் கொண்டிருக்கிற எதிர்கால சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் எந் நேரமும் கஞ்சா பெற்றுக் கொள்ளலாம் என நோயாளி ஒருவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் கஞ்சாவினை கடலை விற்பது போல விற்பனை செய்கிறார்கள். இது யாருக்கும் தெரியாத விடயம் என நான் நினைக்கவில்லை. எல்லோருக்கும் தெரியும் எல்லோரும் எனக்கு என்ன என்ற போக்கில் இருக்கிறார்கள். அரசியல்வாதியாக இருக்கட்டும், மாகாணசபை உறுப்பினர்களாக இருக்கட்டும் அனைவருக்கும் தெரியும்.

உயர் பதவிகளில் உள்ளவர்கள், உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள், குளிரூட்டப்பட்ட கார்களில் திரிபவர்கள் கஞ்சா விற்னை செய்வதாக பல நோயாளிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒரு உதவி இல்லாமல் ஓர் வியாபாரம் தளைக்கும் என்றால் எத்தனையோ குட்டிக்கடை நடத்துபவர்கள் கோடீஸ்வரர்களாக இருக்க வேண்டும். போதை வியாபாரிகள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். இது நோயாளிகள் சொன்ன உண்மைத் தகவல்.

போதைப்பொருள் பாவிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், அதோடு திரிபவர்கள் உங்களோடு இருக்கிறார்கள். அதை கண்டுபிடிக்கக் கூடியவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் அத்தோடு பெற்றோர்கள் .

இது மகளிருக்கான கடமை மட்டுமல்ல எல்லோருக்கும் உரித்தான கடமை.

எல்லோரையும் கேட்டுக் கொள்வது ஆடம்பரமாக மேடைகளில் வந்து கைதட்டல்களை வாங்கிக் கொண்டு போனால் எமது சமுதாயம் உருப்படாது.

எமது சமுதாயம் உருப்பட வேண்டும் என்றால் ஆக்கபூர்வமாக எங்கு சம்பவம் நடக்கிறதோ அங்கு செல்ல வேண்டும் உற்றுக் கவனிக்க வேண்டும். அதைச் செய்யாது ஒரு நாள் மேடையில் பேசி பத்திரிகைகளில் வந்தால் நான் ஏதோ போதைக்கு எதிராக உழைப்பவனோ, உழைப்பவளோ என நினைத்து விடாதீர்கள். எனது பேச்சில் யாரையும் காயப்படுத்தி இருந்தால் மன்னிக்கவும். ஏனெனில் நான் நோயாளிகளைப் பார்க்கின்றேன். போதைக்கு அடிமைப்பட்டவர்களை பார்க்கிறேன் ஒரு குழந்தை அல்லது மகன் பாதிக்கப்பட்டால் தாய், சோதரன் கண்ணீர் வடிக்கிறான். அவர்கள் எவ்வளவு கற்பனைக் கோட்டைகளை கட்டியிருப்பார்கள்.

ஒரு மாணவன் பரீட்சையில் சித்தி எய்தாவிட்டாலும் அவன் வேறு திசையில் மாறிச் சென்று விட்டால் அதிபர், ஆசிரியர்கள் அவர்களுடன் அன்பாய் இருந்தால் அவர்கள் தங்களிற்கு நடந்ததை சொல்வார்கள்.

போதைக்கு எதிரான இயக்கம் இங்கு இருப்பதையிட்டு பெருமைப்படுகிறேன். ஆனால் மிகுந்த அக்கறையுடன், சமூக அக்கறையுடன் செயற்பட வேண்டும். போதைக்கு எதிரான இயக்கத்தை தொடங்கி விட்டோம் என இறுமாப்புடன் இருந்துவிடாது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து எமது சமுதாயத்தை பருத்தித்துறை மட்டுமல்ல எமது தமிழர் சமுதாயத்தை ஏன் இந்த மனித சமுதாயத்தை ஓர் போதையில்லாத பாதையில், போதையில் இருந்து மீட்டு நடத்திச் செல்ல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (5-60)





வடமராட்சி உழைக்கும் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் அரச.அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின விழாவும் ஆக்கப்பொருட் கண்காட்சி விற்பனையும் புலோலி மந்திகையில் உள்ள தலைமைப் பணிமனையில் இடம்பெற்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருமதி சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆ.சிறி, சிறப்பு விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை தலைவர் நா.இராஜேந்திரம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.சா.அரியகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# அதிக வெப்பம்

# மாணவர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவும்

## ஆளுநர் அசாத் சாலி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அதிக வெப்பத்திலிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி வலியுறுத்தியுள்ளார்.

அதிக வெப்பநிலையால் ஏற்படும் சுகாதார சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அசாதாரண வெப்ப நிலைக்கு முன்னராகவே 90வீதமான பாடசாலைகள் தம்முடைய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நிறைவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வு கூறலின் படி மாத்தளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, மாத்தறை, அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்ப நிலையுடன் கூடிய காலநிலை நிலவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

பழமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(7957)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

விளம்பரத் தொடர்புகளுக்கு
வலம்புரி
021 221 7603, 021 567 1532

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: 60 செவ் இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, London
எதிர்பார்ப்பு: வெளிநாடுPR(London)
தொ.இ: B/9459

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'7''
தகைமை/தொழில்:A/L, Police
எதிர்பார்ப்பு: படித்தபெண்,(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9460

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 3
கி.பா: 20
உயரம்: 5'6''
தகைமை/தொழில் :Computer Engineer, Canada PR
எதிர்பார்ப்பு: பல்கலைக்கழக பட்டதாரி
தொ.இ: B/9463

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:உத்திரட்டாதி 2
கி.பா: 10 ¼
உயரம்: 175cm
தகைமை/தொழில்:B.Sc, MSc, Lecturer (Currently working in Srilanka), Canada PR
எதிர்பார்ப்பு:Engineer, Accountant, Doctor வெளிநாடுசெல்வதற்கும் விருப்பம் உள்ளவர்கள் விரும்பதக்கது, (உள்நாடு)
தொ.இ: B/9465

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 19 ½
உயரம்: 5'3''
தகைமை/தொழில்:Following CIMA & Accounting
எதிர்பார்ப்பு:Engineer,Doctor,Accountant, (உள்நாடு)
தொ.இ: G/9471

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 1
கி.பா: 09
உயரம்: 5'3''
தகைமை/தொழில்:B.Scஅரசகட்டட மேற்பார்வையாளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/9474

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.ப: செவ் 12 இல்
உயரம்: 5'1''
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்த தொழில் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9475

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 1
கி.பா: 11சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'2''
தகைமை/தொழில்:A/L, BIT
எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்
தொ.இ: G/9477

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணிவிழா வாழ்த்துக்கள்

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஆசிரிய சேவையில் இணைந்து எமது மாணவச் செல்வங்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி அகவை அறுபதை பூர்த்தி செய்து 13.03.2019 இன்று முதல் ஓய்வுபெறும் தங்களது ஓய்வுக்காலம் நலமே அமைய வாழ்த்துகின்றேன். "கடமையை செய் பலனை எதிர்பாராதே" எனும் கீதை காட்டிய பாதையில் தாங்கள் தன்னலம் கருதாது ஆற்றிய பணி தங்களது ஓய்வுக்காலத்தை குடும்பத்துடன் மன நிறைவோடும், மகிழ்வோடும் கழிக்க வழிகாட்டும். உங்களால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் வளர்ந்து சமூகத்தில் உயர்ந்து நிற்கும் போது தங்கள் உள்ளம் பூரிப்படைவதுடன் தங்கள் சேவையால் பாடசாலையும் எங்கள் யாழ்ப்பாண கல்விவலயமும் பெருமையடைகின்றது. மன அமைதியுடன் எல்லா நலன்களும் பெற்று நீண்டகாலம் குடும்பத்துடன் மகிழ்வுடன் வாழ்ந்து மேலும் பொது வாழ்வில் அர்ப்பணிப்புடன் ஈடுபட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

எஸ். சுந்தரசிவம், வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

### மணிவிழா நாயகியே நலமுடன் வாழ்க!

எமது கல்லூரியில் வரலாறு மற்றும் குடியுரிமை ஆகியபாடங்களை கற்பித்து ஆயிரமாயிரம் இதயங்களின் அன்புக்கு மகுடமான எமது ஆசிரியை திருமதி.சந்திரவதனி தவராசா அவர்கள் இன்றைய தினம் அகவை அறுபதில் கால்பதிக்கின்றார். இவர் கல்விப் பாதையிலே பல மாணவர்களுக்கு மட்டுமன்றி இளைய ஆசிரிய தலைமுறையினருக்கும் நல்ல கலங்கரை விளக்காய் நின்று வழிகாட்டிய பெருந்தகையாவார். தனது ஆசிரியப்பயணத்தில் மூன்று தசாப்தங்களை கடந்து சேவையாற்றிய இவர் மனதின் மேடைதனில் மகிழ்ச்சி தாண்டவமாட உயிரின் வேர்களிலே உற்சாகம் ஊற்றெடுக்க இம் மண்ணிலே நலமுடன் பல்லாண்டு காலம் தன் குடும்பத்துடன் சுவடி வாழ ஆசிரியர் நலன்புரிக்கழகம் சார்பாக மனதார வாழ்த்துகின்றேன்.

திரு.சோ.ரஜீவ்,
தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.



**திருமதி சந்திரவதனி தவராசா**
**(B.A. (Hons) ECONOMICS-SLTS-I)**

ஆரம்பக் கல்வி :- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
இடைநிலைக்கல்வி :- யாழ்.இந்து மகளிர் கல்லூரி
உயர் கல்வி :- யாழ்.பல்கலைக்கழகம்
சேவை விபரம் :

- 26.12.1985 முதல் நியமனம் கிளி/ கனிஷ்ட மகா வித்தியாலயம்
- 6.10.1986 கிளி/ முரசுமோட்டை அ.த.க. பாடசாலை
- 7.10.1990 கிளி/முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்
- 7.10.1992 யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்
- 10.09.2001 யா/ சென்றோக்ஸ் வித்தியாலயம்
- 01.01.2003 யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
- 15.09.2003 யா/கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்
- 13.01.2011 யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C-5759)

### வளமுடன் வாழ்க பல்லாண்டு

திருமதி.சந்திரவதனி தவராசா அவர்கள் அகவை அறுபதில் 34 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளும் இவ்வேளையில் அவரது அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர் சேவையை நயந்து பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்லூரியில் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி தனது சேவையினூடாக மாணவர்களின் மனங்களிலே தடம் பதித்து நிற்பதும் இவர் கற்பித்த வரலாறு மற்றும் குடியுரிமைப் பாடங்களை மாணவர் மனங்களிலே ஆழமாகப் பதியும் வண்ணம் கற்பித்து மாணவர்களை நல்வழிப்படுத்தியமையும் இத் தருணத்தில் நினைவு கூரக் கூடியவை. கிளி/கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் தொடங்கிய இவரது கற்பித்தல் பணியானது மூன்று தசாப்தங்களைக் கடந்து யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிறைவாகியுள்ளது. தனது ஆசிரியத்துவத்தினால் அதிபர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தனக்கென ஓரிடத்தைப்பெற்று நிற்கும் திருமதி. ச.தவராசா அவர்கள் அகவை அறுபது கண்டு மணிவிழாக் காணும் தருணத்தில் அவர் தம் குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியம் பெருமானின் நல்லருளை வேண்டி கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வதில் நிறைவடைகின்றேன்.

திரு. ப.ஞானசம்பந்தன்
அதிபர்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

### ஆசிரியர் குல மணிவிளக்கு

யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் வரலாறு மற்றும் குடியுரிமை ஆகிய பாடங்களை சிறப்பாகக் கற்பித்ததுடன் மாணவர்களை நல்வழிப்படுத்திய மணிவிழா நாயகி திருமதி.சந்திரவதனி தவராசா அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் என்றும் அருள்புரிய வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

திரு.க.சிவதாஸக் குருக்கள், பிரதம குரு,
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய
ஆலயம்.

# யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம் பரப்பிய பண்டிதமணி

மட்டுவில்தந்த பண்டிதமணி சென்ற விகாரிக்கு முந்திய விகாரி வருடம் 27.06.1899 ஆம் ஆண்டுபிறந்தார். எதிர்வரும்விகாரிவருடம் 27.06.2019 இல் 120 வயதாகின்றது. இவர் கடந்த 13.03.1986 ஆம் ஆண்டு சிவபதம் எய்தினார். இவருடைய தந்தையார் "தர்மா" என்று அழைக்கப்படும் சின்னத்தம்பியும் தாயார் தனங்கிளப்பு வள்ளியம்மையும் ஆவார்.

"கந்தபுராண கலாசாரம்" என்னும் நூலை 1959 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூலில் கந்தபுராணத்தின் அருமை பெருமைகள் இரு கட்டுரையில் எழுதியுள்ளார். மேலும் "கண்ணூறு" என்ற கட்டுரையில் இன்று நாம் அடைகின்ற துன்ப துயரங்களை விரிவுபடுத்திக் கூறியுள்ளார்.

"முன்னொரு காலத்தில் மூவு லகந் தன்னில்
வந்திடும் உயிர்செய்த வல் வினை அதனாலே
அந்தமில் மறை யெல்லாம் அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரும் மருளுற்றார்"

என்ற கந்தபுராணப் பாடலை நினைவு கொள்வோம்.

பண்டிதமணியின் இந் நூலை எம்மக்கள் தேடி எடுத்து கற்கவேண்டும். கந்தபுராணம் சைவ ஆலயங்களிலும் மடாலயங்களிலும் ஆண்டு தோறும் விதிமுறைப்படி படித்து பொருள் சொல்லப்படவேண்டும். ஒரு ஆண்டில் மூன்று மாத காலம் கந்தபுராண காலம் என்பர். கந்



தபுராணம் படிக்கும் போது கோயில்களில் சந்நிதி விரோதம் இல்லாமல் சந்நிதானத்துக்கு தெற்கே வடக்கு முகமாக இருந்து பாட்டை வாசித்துப் பொருளுக்கு ஏற்ப பிரிப்பார். மற்றொருவர் கிழக்கு முகமாக இருந்து பாட்டின் பொருளைச் சொல்லுவார். பதப்பொருள், பின்னர் பொழிப்புரை, விசேட உரை என்று விரிவுபெறும். இம் முறை தமிழ் அரசர்கள் காலம் தொடக்கம் இவ்வழக்கம் இருந்து வருகின்றது என்பார்.

பண் டிதமணி யோகர் சுவாமிகளும் கோவில்கள் தோறும் கந்தபுராணம் படிக்கும்படி கூறியிருந்தார்.

இந்த முறைமையை சைவாலயங்கள் பின்பற்றித் தொடர வேண்டும். இவற்றில் பெரிய, சிறிய கோவில் அதிகாரிகள் முன் வருதல் வேண்டும்.

இதனால் பண்டிதமணி கந்தபுராண போதனை, கந்தபுராண தட்ச காண்ட உரை நூல் போன்றவற்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

தேவாரப்பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்களில் கந்தபுராணபடனம் இடம்பெறுதல் வேண்டும்.

சிறுசிறு கோவில்களிலும் நல்லூர் போன்ற சில ஆலயங்களிலும் கந்தபுராணம் நடைபெற்றுவருதல் ஒரு அமைதியைத் தருவதாகும்.

இன்று நம் சைவத்தமிழ் மக்கள் அடையும் துன்பங்களில் இருந்து மீட்சிபெற கந்தபுராணத்தைப் படித்து ஒழுகி கந்தபுராண கலாசாரத்தை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நிறுவுவோமாக "சிவவழிபாடு வாழ்க்கையின் ஜீவ நாடி" என்று கூறிய பண்டிதமணியை நினைவு கொள்வோமாக.

**கா.சிவபாலன்**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# மலச்சிக்கலுக்கு மூலிகை மருத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

" மலச்சிக்கல் தீர்ந்தால் உடல் சிக்கல் தீரும் என்பது பழமொழி"

உணவுப் பழக்கங்களாலும் வாழ்வியல் முறையாலுமே மலச்சிக்கலைத் தீர்க்க முடியும். காலை எழு



ந்தவுடன் 400 மில்லி அளவு காய்ந்து ஆறிய நீரைப் பருக வேண்டும். உணவை நன்கு மென்று நிதானமாகவும் அளவாகவும் உட்கொள்ளவேண்டும். தோல், நார்த்தன்மையான உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்ளல் வேண்டும்.

தீட்டாத தானியங்களில் இருந்து கிடைக்கும் மாவை உணவு தயாரிக்கப் பயன்படுத்தல் வேண்டும்.

காய்கறிகளைச் சமைக்கும் போது தோலுடன் சமைத்தல் நன்று. உதாரணம் பூசணிக்காய், வாழைக்காய்.

எல்லாவிதமான கீரைகளையும் முக்கியமாக அறக்கீரை, குத்துப்பசளி, கொடிப்பசளி போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

பழவகைகள், கதலி, நாருடன் சேர்ந்த இதரை, பப்பாளி, தர்ப்பூசணி, வெள்ளரி, வில்வம்பழம், விளாம்பழம், மாம்பழம் போன்ற சகலவிதமான பழவகைகளையும் மாறி மாறிச் சாப்பிடலாம்.

குரக்கன் மா சேர்த்த உணவுகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு நாளைக்கு 1800-2000 மில்லி காய்ந்து ஆறிய நீரைப் பருகவேண்டும்.

முழுக்கோதுமை அரிசி மாவில் சமைத்த உணவைப் பயன்படுத்த வேண்டும்.

கறிவேப்பிலை இலைகளை நிழலில் உலர்த்தி இதனுடன் உப்பு, மிளகு, சீரகம், சுக்கு முதலியவற்றை சேர்த்து பொடியாக்கி சோற்றில் கூட்டி கொஞ்சம் நெய்விட்டு கலந்து உட்



கொள்ள மலம் கழியும்.

இரவு உணவு உட்கொண்ட அரை மணிநேரத்தின் பின் 4 பேரீச்சம்பழங்களை 200 மில்லி காய்ச்சிய பாலுடன் உட்கொள்வதும் மலச்சிக்கலை நீக்கும்.

ஆவாரம்பூ-100 கிராம், ரோசாப்பூ-100 கிராம், பனைவெல்லம்-100 கிராம் எல்லாவற்றையும் பொடித்து வைத்துக்கொண்டு ஒரு தேக்கரண்டி காலை, மாலை சாப்பாட்டின்பின் பாலுடன் அருந்தவும். ஒன்றுவிட்ட ஒருநாள் எடுக்கவும்.

மந்தாரைப்பூக்களில் சிவப்பு நிறத்திலுள்ளவற்றை தேவையான அளவு எடுத்து உலர்த்தி இடித்து அரைத்து 500 மில்லிலீற்றர் அளவு அரைத்தேக்கரண்டி தேனில் குழைத்து இரவு படுக்க முன்பு சாப்பிட்டு சிறிது வெந்நீர் அருந்த மலம் இளகி வெளியேறும்.

10 கிராம் உலர்ந்த திராட்சையை தண்ணீரில் ஊற வைத்து பிசைந்து 28 மில்லி அளவு இரவில் கொடுக்க மலம் கழியும்.

2, 3 பெரிய வெங்காயத்தை நீளவாக்கில் சிறு துண்டுகளாக வெட்டி ஆமணக்கு எண்ணெயில் வதக்கிச் சிறிது உப்புச் சேர்த்து வறுத்துச் சுடுசாதத்துடன் சேர்த்து கலந்து சாப்பிட மலச்சிக்கல் நீங்கும்.

சரக்கொன்றை இலைகளை சுத்தம் செய்து இடித்து சாறு பிழிந்து 4 தேக்கரண்டி சாற்றுக்கு தேவையானளவு பனைவெல்லம் சேர்த்து உடன் எடுக்க மலம் கழியும்.

வண்டுகொல்லி இலைகளைச் சேகரித்து கழுவிச் சுத்தம் செய்து சிறிது சிறிதாக அரிந்து நெய்யில் வதக்கி ஒரு மேசைக்கரண்டி இரவில் கொடுக்க மலம் அடுத்தநாள் காலை இலகுவாகக் கழியும்.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்கள் தினசரி இரவு



படுக்கமுன்பு ஓர் அத்திப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் மலம் இளகலாக இறங்கும்.

3 கடுக்காய் பழத்தின் உலர்கனியின் வெளித் தோல்களை 40 மில்லி தண்ணீரில் ஊறவிட்டு இரவில் குடிக்க மலம் காலையில் கழியும்.

ஆலமரத்தின் பழங்களைச் சுத்தம் செய்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து 5 கிராம் அளவு 200 மில்லி பசுவின் பாலில் போட்டுக் கரைத்து இரவு படுக்க முன்பு குடித்து வந்தால் மறுநாள் காலை மலம் இளகலாகக் கழியும்.

3 கடுக்காய்களை உடைத்து விதைகளை நீக்கிவிட்டு அத்துடன் தேவையானளவு கொத்துமல்லிக் கீரை, இஞ்சி, பச்சை மிளகாய், புளி, உளுத்தம் பருப்பு இவைகளைச் சேர்த்து எல்லாவற்றையும் சேர்த்து நெய் யில் வதக்கி அளவாக உப்புச் சேர்த்து அம்மியில் துவையல் செய்து 3 நாட்கள் சோற்றுடன் பிசைந்து சாப்பிட்டு வந்தாலும் மலச்சிக்கல் நீங்கி நல்ல ஜீரண சக்தி உண்டாகும்.

# தோட்டத் தொழிலாளர்களை சமுர்த்திப்பயனாளிகளுக்குள் உள்வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இராதா கிருஷ்ணன் வேண்டுகோள்



(கொழும்பு)

சம்பள அதிகரிப்புக் கோரி போராட்டம் நடத்திவரும் தோட்டத் தொழிலாளர்களை ஆறு இலட்சம் சமுர்த்தி பயனாளிகளுக்குள் உள்வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமே இருக்கின்ற போதும் இது 15 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்குரிய பிரச்சினையென்றும் அமைச்சர் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்புமீதான 5 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தாவது.

கூட்டு ஒப்பந்தத்துக்கு மேலதிகமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்துடன் நாளொன்றுக்கு 50 ரூபாவை வழங்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை நாம் வரவேற்கின்றோம்.

நுவரெலியா மாவட்டத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றபோதும் தொழில் நுட்ப அதிகாரிகள் இல்லாமை பெரும் குறைபாடாகியுள்ளது. பல இடங்களில் சீரான வீதிகள் இல்லாமையினால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அந்த வீதிகளை புனரமைக்க நுவரெலியா மாவட்டத்துக்கென தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லை. எனவே அவ்வாறான வெற்றிடங்கள்நிரப்பப்பட வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திக்காக இந்த அரசாங்கம் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

அதற்காக நான் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் என மேலும் தெரிவித்தார். (7)

# குறை'களை' பதிகம் 30

## மஞ்சள் கோடு எப்போ வரும்?



சைவநெறி தழைத்தோங்கும் தென்மராட்சியிலே
திருநாவுக்கரசு மகா வித்தியாலமதைப் பாருங்கள்
கொடிகாமம் கச்சாய் வீதியினிருமருங்கும்
கல்வியெனும் கனிதரும் இரு விருட்சங்களுண்டு

ஒன்று தேன் தமிழூட்டும் ஆரம்ப பாடசாலை
மற்றையது உயர்தரமும் ஏனைய வகுப்புகளும்
தொடக்க நேரத்திலும் முடிவு வேளையிலும்
வீதியெங்கும் கடப்பார்கள் சின்னஞ்சிறுசுகள்

விதம்விதமாய் வாகனங்கள் விரைந்தோடும்
இவ்வீதியிலே மஞ்சள்கோடு இல்லாமையால்
வீதியொழுங்குமில்லை விபத்துக்களுக்கும் பஞ்சமில்லை
இங்கு மஞ்சள்கோடிடவும் மன்றாடவேண்டுமா?

மாணவர்களின் பெற்றோர் கேட்கும் கேள்விகளிது
மஞ்சள்கோடிடவும் பல்லாயிரம் பணம் தேவையா?
நல்ல நாளும் கோளும்' பார்ப்பதால்தான் தாமதமா?
பதிலைக் கூறுங்கள் மஞ்சள்கோடு எப்போ வரும்?

சி.காசிப்பிள்ளை,
கொடிகாமம்.

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சமுர்த்தி வங்கி முகாமையாளரும் சமூக சேவையாளருமான காங்கேசன்துறை மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த தேவராஜா விக்னேஸ்வரன் யாழ். மேல் நிதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் கடந்த 7 ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (5)

# தெய்வீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாதவேலன் சுவாமிகள் தரிசனம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கோப்பாய் பழைய வீதி ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் இடம் பெறும். (5)

# ஆளுநரின் பொது மக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

ஆளுநரின் பொதுமக்கள் தினம் ஆளுநர் கலா நிதி சுரேன் ராகவன் தலைமையில் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் இன்று 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேலும் , ஜெனீவாவில் இடம்பெறுகின்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்க வேண்டும் என்று கருதும் தமது கோரிக்கைகளை பொதுமக்கள் அல்லது பொது அமைப்புகள் நாளைய தினம் நடைபெறவுள்ள ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பின் போது எழுத்து மூலமாக நேரடியாக கையளிக்கமுடியும்.

பொதுமக்களின் நலன் கருதி குறித்த கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக தனியான பிரிவு அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-7)

# 26 சதவீதமானவர்கள் புகைத்தலுக்கு அடிமை

(கொழும்பு)

நாட்டில் தற்போது 26 சதவீதமான ஆண்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர், டாக்டர் பாலித அபயகோன் தெரிவித்துள்ளார்.

நான்கு ஆண்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஆண்கள் கொண்டுள்ளதாகவும் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் வருடங்களில் இவ்வாறு புகைப்பிடிக்கும் ஆண்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், இதற்கமைய புகைப்பிடிக்கும் ஆண்களின் எண்ணிக்கையை 10 சதவீதமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார். (7)

# இவ்வாண்டிற்கான வாக்காளர் இடாப்பை தயாரிக்கும் பணிகள் ஆரம்பம்-ரஷிக பீரிஸ்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை தயாரிக்கும் ஆரம்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்மாதம் கிராம உத்தியோகத்தர்களின் அறிவூட்டும் நிகழ்வை அடுத்து வாக்காளர்களின் வீடுகளுக்கு விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரஷிக பீரிஸ் தெரிவித்தார்.

இம்முறை வாக்காளர்களின் பெயர்களை இடாப்பில் இணைத்துக் கொள்ளும் நடைமுறை கடந்த கால நடைமுறைகளிலும் வித்தியாசமானது. இதனடிப்படையில் வீட்டில் வசிக்கும் புதிய நபர்களுடைய விபரங்களை வீட்டு உரிமையாளர் அல்லது தலைமை நிரவாகி விண்ணப்பப் படிவத்தில் பதிய வேண்டும் என்பதே நடைமுறையாகும். அத்துடன் 15 இற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அங்கவீன குறைபாடு உடையவர்களின் விபரங்களும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




அமரர் கனகசபை சிவபாதம் அவர்களின் இறுதிச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் தொலைபேசி மூலமும் இணையத்தளம் மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபச் செய்திகளை தெரிவித்தோருக்கும் நோய் வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது மருத்துவ உதவிகள் புரிந்த வைத்தியர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.03. 2019) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைக்ள் முற்பகல் 09.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.
077 375 9719

(A-5756)

குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவில்...



அமரர்
## நாகமணி நல்லதம்பி

வருடம் இரண்டானது உங்கள்
ஆசை முகம் பாராமல்
துயரங்கள் நூறானது ஐயா
உன் புன்னகையை காணாத எம் கண்கள்
பார்வையிருந்தும் குருடானது
வடிந்த கண்ணீர் நீற்கவில்லை
அழு குரல்கள் ஓயவில்லை
ஐயா உன் பூமுகத்தைக் காணாத எம் கண்கள்
ஏங்குவதும் தேங்குவதும் இன்று வரை
தீரவில்லை
வருடம் இரண்டானாலும் துயரங்கள் ஆறாத
சொந்தங்களின் கண்ணீர் காணிக்கை.

பிறப்பு: 1936.02.19 இறப்பு: 2017.03.03

(C-5761)

கனகசபை வீதி.
மானிப்பாய்.

குடும்பத்தினர்
0779992236

# விஞ்ஞானவார கண்காட்சி





கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2019 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான வாரத்தின் முதல் நாள் கண்காட்சி கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.சாரங்கா தலைமையில் அதிபர் கி.விக்கினராஜாவின் ஆலோசனைக்கு அமைவாக கண்காட்சி நடைபெற்றது.

விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு உயிரியல் மாணவர்கள் மேற்கொண்ட முக்கிய அம்சமாக மனித உடல் உறுப்புக்களின் பிரதான பாகங்களான மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம், ஈரல், மண்ணீரல், நாடி ஆகிய உறுப்புக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இக் கண்காட்சியை பல பாடசாலைகளிலிருந்தும் வருகை தந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிட்டுப் பயன் பெற்றனர். (2)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2019 ஆம் ஆண்டுக்கான மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் சுற்றாடல் முன்னோடிக் குழுவிற்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் தேசிய மாணவர் படை யணிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

# மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஊன்றுகோலாகவுள்ள இரணைமடுகுளம் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுகின்றது

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டு போதிய நீர் தேக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது என்பதற்கு அப்பால் மாவட்டத்தின் குடிநீர்த்தேவை, நன்னீர் மீன்பிடி, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட வாழ்வாதார செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் இவ்வாண்டுக்கான சிறுபோக பயிர்ச்செய்கைக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்டத்தின் பெரும் வளமான இரணைமடுக்குளம் நீண்ட காலத்திற்குப் பின்னர் முழுமையாகப் புனரமைக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில மிக முக்கியமான வாழ்வாதாரத்தை வழங்குகின்ற வளமாகக் காணப்படுகின்ற இக்குளம் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுகின்றது.

அதாவது விவசாயம், நன்னீர் மீன்பிடி, மாவட்டத்தில் காணப்படுகின்ற பல கிராமங்களுக்கான சுத்தமான குடிநீரை வழங்குகின்ற ஒரு வளமாகவும் அமைந்துள்ளது.

அத்துடன் கால்நடைகள், ஏனைய விலங்குகளின் குடிநீர்த் தேவைகளையும் இக்குளம் பூர்த்தி செய்கின்றது. மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஊன்றுகோலாக இக்குளத்தின் நீரை உரியவாறு பயன்படுத்தி வெற்றிகரமாக சிறுபோகச்செய்கை மேற்கொள்ள வேண்டியது அனைத்து விவசாயிகளினதும் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவையின்மை நெல் அறுவடைக்குப்பின்னர் வைக்கோலுக்கு எரியூட்டுவதனால் அறுவடைக்குப்பின்னர் கால்நடைகளுக்கான மேய்ச்சல் இன்மை தொடர்பில் பண்ணையாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளித்த மாவட்ட அரச அதிபர், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை அமைப்பது தொடர்பில் தொடர்ந்து இந்தக் கோரிக்கைகளை நாங்களும் முன்வைத்து வருகின்றோம், இறுதியாக ஜனாதிபதி செயலகத்திற்கும் அனுப்பி வைத்திருக்கின்றோம். சிறுபோக பயிர்ச் செய்கை காலத்தில் தற்காலிகமாக இரணைமடுக் குளத்தின் கீழுள்ள பிரதேசத்தில் வைத் துப் பராமரிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (2-315)




# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நிகழ்வு





(குருமன்காடு)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை அக்குனஸ் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் அருட் சகோதரி எஸ்.ஜெபநாயகி தலைமையில் மாணவர்களுக்கான சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் விழிப்புணர்வு நிகழ்வை வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் மேற்கொண்டது. இதன்போது சிறுவர்கள் எதிர்நோக்கும், போதைப் பாவனை, துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸாரால் மாணவர்களுக்கு ஒளிப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு விழிப்புணர்வு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் விளையாட்டுத் துறையில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழ்கள், கேடயங்கள் என்பனவற்றை வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர அபேயவிக்கிரம, வடமாகாண கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவரும், கிறிஸ்தவ மத விவகாரங்களுக்கான செயலாளருமான அருட்கலாநிதி எஸ்.சந்திரகுமார், போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிறுவர், பெண்கள் பொறுப்பதிகாரி, பொலிஸார், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# உந்துருளி மோதித் தள்ளியதில் வயோதிப தாயொருவர் உயிரிழந்தார்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபதாயொருவர் உயிரிழந்துள்ளார்.

மந்துவில் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி வீதியால் பயணித்த உந்துருளி வீதியில் சென்று கொண்டிருந்த வயோதிப தாயொருவரை மோதித்தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பிரஸ்தாப தாயார் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தை ஏற்படுத்திய உந்துருளி தப்பிச்சென்றுள்ள நிலையில் உந்துளியையும் விபத்தை ஏற்படுத்தியவரையும் இனம்காண முடியாத நிலையில் உயிரிழந்த வயோதிபரின் சடலம் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மந்துவில் 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னப்பு கிறீஸ்ரீனாள் (வயது-75) என்ற வயோதிப தாயே உயிரிழந்தவராவார். (2-281)

# செல்வபுரத்தில் வீடு தீக்கிரை!

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் குடும்பம் ஒன்றின் வீடு நேற்று அதிகாலை தீயில் எரிந்து முற்றாக சாம்பலாகியுள்ளது.

வீட்டில் இருந்த அனைத்துப் பொருட்களும் எரிந்து சாம்பலாகிய நிலையில் அதில் உறங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளும் தாயும் எதுவித உயிராபத்துக்கள் இன்றி தப்பியுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரால் முறையிடப்பட்டதற்கு அமைவாக அருகிலுள்ள மனநிலை பாதிக்கப்பட்ட வயோதிப் பெண்ணை அழைத்துச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (2-281)


# காந்தி கிராமத்தில் சட்டவிரோத மண்ணகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமம் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காந்தி கிராமம் பகுதியில் இவ்வாறு சட்டவிரோத மண்ணகழ்வு இடம்பெற்று வருவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் சிறு கழிவு நீர் வாய்க்காலாக இருந்த பகுதி இன்று இவ்வாறு பாரிய கங்கை ஆறு போன்று காட்சி அளிக்கும் அளவிற்கு மண்ணகழ்வு இடம் பெற்றுள்ளது.



குறித்த பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தின் ஊடாக வாகனங்கள் பயணித்து மண்ணகழ்வில் ஈடுபடுவதனால் அங்கு விளையாட்டுக்களில் ஈடுபட முடியாத அளவில் மைதானம் சேதமடைந்துள்ளதாகவும் விளையாட்டில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மண்ணகழ்வினை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (2)

## வவுனியா குளங்களில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை

### நகர சபை தவிசாளர் எச்சரிக்கை



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட் பட்ட குளங்கள் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை வீசு வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள் ளார்.

வவுனியா வேப்பங்குளம், கறையான் குளம் என்பவற்றை நகரசபை தவிசாளர் இ.கௌத மன், நகரசபை உறுப்பினர் லரீவ், தவிசாளரின் பிரத்தியேக செயலாளர் சஜீந்திரா ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது குறித்த குளங் களில் குப்பைகளை வீசுவது கண்டறியப்பட்டுள்ளதுடன் குப் பைகளை வீசுவோரை அடை யாளப்படுத்தும் சான்றுப் பொரு ட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த நபர்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த தவிசாளர் இனிவரும் நாட்களில் குளங்கள் மற்றும் பொது இடங் களில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (2-250)

## இரணைமடு குளத்தின் கீழ் 14 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

### விதைப்பு, நீர் விநியோகத் திகதிகள் அறிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் அறுபது வீதமான நிலப்பரப்பில் அதாவது 14 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மா னிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவ ட்ட செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றுள்ளது.



இரணைமடுக்குளம் முழு மையாக அபிவிருத்தி செய்யப் பட்டு அதிகளவான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் ஆண்டாக இவ்வாண்டு அமை



ந்துள்ள நிலையில், இதற்கான பயிர்ச்செய்கை கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் சுந்த ரம் அருமைநாயகம் தலைமை யில் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் அறுபது வீத மான நிலப்பரப்பில் அதாவது 14 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது டன், இதற்கான விதைப்புத் திகதி, நீர் விநியோகத் திகதி, கால்நடை கட்டுப்பாட்டுத் திகதி என்பன அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத் தீர்மானங்களுக்கு அமைவாக சகல நடவடிக்கை ளையும் முன்னெடுக்குமாறு இக்கூட்டத்தில அறிவுறுத்தப்பட் டுள்ளது.

நேற்று நடைபெற்ற இக்கூட் டத்தில் மாவட்ட அரசாங்க அதி பர், துறைசார் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை விவசாய அமை ப்புக்கள் மேலதிகமாக ஆயிரத்து 250 ஏக்கரை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். (2-315)




## இயக்கச்சி உப தபாலகத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு நிதியொதுக்கீடு

பச்சிலைப்பள்ளி பிரதேசத் தின் இயக்கச்சி உப தபாலகத் தின் நிரந்தரக் கட்டடம் அமைப்ப தற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் 1.5 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கப்பட்டுள்ள தாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

இயக்கச்சி பகுதியில் மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக பொது அமைப்புகளுக்கு விளக்க மளிக்கும் கலந்துரையாடல் அண்மையில் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே தவிசாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் நிதியொதுக்கீட்டின் மூலம் இயக்கச்சி வட்டாரத்தில் கோவில் வயல் மில் வீதிக்கு இரண்டு மில்லியன் ரூபாவும், கொற்றாண்டார் குளம் உள்ளக வீதிக்கு 1.15 மில்லியன் ரூபாவும் விநா யகபுரம் சிறுவர் பூங்கா விற்கு 0.5 மில்லியன் ரூபாவும் இயக்கச்சி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பிரதேசத்தின் அபிவிருத்திகளை துரிதகதியில் முன்னெடுப்பதாகவும் தொடர்ச்சி யாக இவ்வாறான அபிவிருத்தி கள் இடம்பெறும் எனவும் தெரி வித்தார். (2)

## அக்கராயன் குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 790 ஏக்கரில் சிறுபோக செய்கை;திகதி அறிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான அக்கராயன் குளத்தின் கீழ் இவ்வாண்டு இரண்டாயிர த்து 790 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

அக்கராயன் குளத்தின் தற் போதுள்ள நீரின் அளவைக் கொண்டு இரண்டாயிரத்து 790 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட வுள்ளது. இதற்கான முன்னாயத் தக்கூட்டம் நடைபெற்று பயிர்ச் செய்கைக்கான திகதிகள் அறி விக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங் கள் நிலவிய தொடர் வரட்சி காரணமாக 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான காலபோக செய்கை பாதிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டிலே சிறுபோகச் செய்கையும் மேற்கொள்ள முடி யாத நிலை ஏற்பட்டது.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் பெய்த பெருமழை காரணமாக குளத்தின் நீர்மட்டம் அதிகரித்த நிலையில் காலபோக செய்கை வெற்றிகரமாக அறுவடை செய் யப்பட்டு தற்போது சிறுபோகச் செய்கைக்கான முன்னாயத் தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை குளத்தினு டைய அபிவிருத்திப்பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## போக்குவரத்து வசதியின்மையால் மாணவர்கள், ஆசிரியர்கள் அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகளவான கிராமங்களுக் கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாண வர்கள் தொடர்ந்தும் சொல்லொ ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று புதுக்குடியிரு ப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட் டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிர தேச செயலாளர் பிரிவுகளுக்குட் பட்ட 136 கிராம அலுவலர் பிரிவு கள் உள்ளடங்குகின்ற சுமார் 624 கிராமங்களை மையமாக வைத்து 124 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இந்த 124 பாடசாலைகளிலும் 70 இற்கும் மேற்பட்ட பாடசாலை களுக்கான போக்குவரத்து வசதி கள் மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்ப ட்டவர்கள் தமக்கான வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)



வவுனியா மாவட்ட செயலகம், மாவட்ட சமூக சேவை அலுவலகம், மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களம், அரசாற்பற்ற நிறுவனங்கள் என்பன மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நடத்துகின்ற "சிறப்பான உலகிற்கு சிறந்த ஒரு பெண்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின விழாவும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## முதியோர்கள் ஆன்மீகச் சுற்றுலா

(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்தின் திருத் தலங்களான திருக்கேதீஸ்வரம், மடு மாதா கோயில் ஆகியவற்றி ற்கு கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் அம்பாள்நகர் கிராம அலுவலர் பிரிவின் சாந்தபுரம் கிராம முதியோர்கள் 50 பேர் ஆன்மீகச் சுற்றுலாவுக்காக நாளை வியாழக்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வட மாகாண சமூக சேவை கள் திணைக்களத்தின் கிளிநொ ச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினால் இந்தப் பயண ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின் றது.

கிராமமட்ட முதியோர் சங் கங்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட தமது உறுப்பினர்க ளுக்கு இச் சேவையைப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் கிடைக்கப் பெறும் கோரிக்கைகளுக்கு ஏற்ப அனு சரணையாளர்கள் மூலமாக பயண ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றனர். (2)

## பாரதம்

# பாலகோட் முகாம் தாக்குதல் 263 தீவிரவாதிகள் உயிரிழப்பு

## இந்திய உளவுத்துறை உறுதியான தகவல்

(டில்லி)

பாகிஸ்தானின் பாலகோட் தீவிரவாத முகாம் மீது இந்திய போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 263 தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாக புதிய தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக 'டைம்ஸ் நவ்" சனல் ஒளிபரப்பிய செய்தியில் கூறியிருப்பதாவது,

கடந்த மாதம் 26 ஆம் திகதி பாகிஸ்தானின் பாலகோட் தீவிரவாத முகாம் மீது இந்திய போர் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் 263 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனை இந்திய உளவுத் துறை உறுதி செய்துள்ளது.

உயிரிழந்த தீவிரவாதிகளில் 18 பேர் சிரேஷ்ட தளபதிகள் ஆவர். 25 பேர் தற்கொலைப் படை தீவிரவாதிகள் ஆவர்.

இவ்வாறு அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா டுடே வெளியிட்ட செய்தியில், பாலகோட் தீவிரவாத முகாம் மீதான தாக்குதலில் அங்கு தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்த பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 4 வீரர்களும் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# பாலகோட் விமானத் தாக்குதலுக்குப் பின்னர் மோடியின் செல்வாக்கு உயர்வு; ராகுலுக்கு சரிவு

## கருத்துக் கணிப்பில் தகவல்

(புல்வாமா)

புல்வாமா தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் இந்திய விமானப்படை நடத்திய தாக்குதலுக்குப் பின், பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கு உயர்ந்துள்ளது. மக்கள் மத்தியில் பா.ஜ.க. அரசின் மீதான நம்பகத்தன்மை அதிகரித்துள்ளது என்று சி- வோட்டர், ஐஏஎன்எஸ் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

அதேசமயம், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் செல்வாக்கு, பாலகோட் விமானத் தாக்குதலுக்குப் பின் சரிந்துள்ளது என்றும் தெரியவந்துள்ளது.



சி- வோட்டர்ஸ், ஐஏஎன்எஸ் இணைந்து கடந்த 7 ஆம் திகதி பல்வேறு தரப்பு மக்களிடம் மத்திய அரசு, பிரதமர் மோடி, ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சி குறித்து கருத்துக் கணிப்பு நடத்தியது.

அந்த கருத்துக் கணிப்புகளின் முடிவில், "பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு செயற்படும் விதம் தங்களுக்கு மனநிறைவு அளிப்பதாக கருத்துக் கணிப்பில் பங்கேற்ற மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது கடந்த ஜனவரி முதலாம் திகதி நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 36 சதவீதம் மத்திய அரசு மீது திருப்தி தெரிவித்த நிலையில், இப்போது 62 சதவீதம் பேர் மத்திய அரசின் செயற்பாடு திருப்திகரமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

சி-வோட்டர் நிறுவனத்தின் கள ஆய்வாளர் யஷ்வந்த் தேஷ்முக் கூறுகையில், "ஜனவரி 1 மற்றும் மார்ச் 7ஆம் திகதி ஆகியவற்றுக்கு இடையே இரு முக்கிய நிகழ்வுகள் நடந்துள்ளன. ஒன்று பெப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட், அதில் அறிவிக்கப்பட்ட பல்வேறு சலுகைகள், 2ஆவதாக புல்வாமா தாக்குதலுக்குப் பின் பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் இந்திய விமானப்படை நடத்திய துல்லியத் தாக்குதல்.

பட்ஜெட்டுக்குப் பின், பிரதமர் மோடி மீதான செல்வாக்கும் மத்திய அரசு மீதான நம்பிக்கையும் சிறிது அதிகரித்து இருந்தது.

ஆனால், பாலகோட் தாக்குதலுக்குப் பின் மோடி மீது மக்களிடம் மதிப்பு அதிகரித்துள்ளது, அரசு மீதான நம்பிக்கையும் உயர்ந்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பின் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தானுக்கு எந்தவிதமான பதிலடியும் தராமல் இருந்தார்.

ஆனால், பிரதமர் இந்திரா காந்திக்குப் பின், பாகிஸ்தான் எல்லைக்குள் சென்று, தங்களுக்கு ஏற்பட்ட சேதத்துக்குப் பதிலடி கொடுத்தவர் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் மத்தியில் மோடியின் செல்வாக்கு உயர்ந்துள்ளது.

அதேசமயம், இந்தக் கருத்துக் கணிப்பில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு இருக்கும் செல்வாக்கு சரிந்துள்ளது. அதாவது புல்வாமா தாக்குதலுக்குப் பின் 23 சதவீதம் இருந்த ராகுலின் செல்வாக்கு, 8 சதவீதமாகச் சரிந்துள்ளது" எனத் தெரிவித்தார். (7)

## மக்கள் ஆர்ப்பாட்டத்தின் எதிரொலி

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன்

## அல்ஜீரிய ஜனாதிபதி அறிவிப்பு

()

அல்ஜீரிய ஜனாதிபதி அப்துலசீஸ்கக்கு எதிராக அல்ஜீரியாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுத்து வரப்படும் நிலையில் தான் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

தமது நாட்டினர் உட்பட பிரான்சில் வசிக்கும் அல்ஜீரிய மக்களும் அவருக்கு எதிராக போராடி வரும் நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவர் மேற்கண்டவாறு தெவித்துள்ளார்.

82 வயதான ஜனாதிபதி அப்துலசீஸ் 5 வது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்ததை அடுத்து அதற்கு எதிராக அந்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.


இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்ததோடு பலரும் காயமடைந்திருந்தனர். இந்நிலையில் மீண்டும் போட்டியிட்டு தான் வெற்றி பெற்றால் இரண்டாவது முறையாகவும் ஒரு தேர்தலை நடத்துவதாக அவர் தெரிவித்திருந்தார். அர்த்தமற்ற அவரது பதிலினால் மக்கள் தொடர்ந்தும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

இந்நிலையில் ஏப்ரலில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் போட்டியிட போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# சிரியாவி

## பெண்கள், கு





## எதியோப்பிய விமான விபத்து

# தாமதமாக வந்ததால் உயிர் தப்பிய பயணி

(அடிஸ் அபாபா)

கிரீஸ் நாட்டை சேர்ந்த அண்டோனிஸ் என்ற பயணி விமான நிலையத்திற்கு 2 நிமிடங்கள் தாமதமாக வந்ததால் விமான விபத்தில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினார்.

எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் இருந்து, கென்யா தலைநகர் நைரோபிக்கு புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 157 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விமானத்தில், கிரீஸ் நாட்டை சேர்ந்த அண்டோனிஸ் மவரோபெலோஸ் என்பவர் பயணம் செய்ய இருந்தார்.

ஆனால் அவர் விமான நிலையத்திற்கு 2 நிமிடங்கள் தாமதமாக வந்ததால் விமானத்தை தவற விட்டார். இதனால் அவர் விமான விபத்தில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினார்.


இது குறித்து தனது முகநூலில் பதிவிட்டுள்ள அவர், "இது எனக்கு அதிர்ஷ்டமான நாள், நான் 2 நிமிடங்கள் தாமதமாக வந்ததால் என்னால் அந்த விமானத்தில் செல்ல முடியவில்லை.

விமான நிலையத்தில் உள்ள அதிகாரிகளுடன் நான் அந்த விமானத்தில் செல்ல வேண்டும் என வாக்குவாதம் செய்தேன்.

ஆனால் அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை. விமானம் கிளம்பிய 6 நிமிடங்களில் விபத்துக்குள்ளானதை கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். என் அதிர்ஷ்டத்தால் நான் பிழைத்துள்ளேன்" என குறிப்பிட்டுள்ளார். (7)

# வெளிநாடு

## ...யில் வான்வழித் தாக்குதல்
## ...குழந்தைகள் உட்பட 50 பேர் பலி





(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் கிழக்கு பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் வசமுள்ள கடைசி நகரத்தின் மீது அமெரிக்கா தலைமையிலான விமானப்படைகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியா நாட்டின் பல முக்கிய நகரங்களை முன்னர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திவந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அரசுப்படைகள் நடத்திய ஆவேசத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

பலர் உயிர் பயத்தில் பாலைவனப்பகுதிகளை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

இந்நிலையில், நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள டேய்ர் அல்-சோர் மாகாணத்துக்கு உட்பட்ட பக்ஹவுஸ் நகரில் உள்ள சில பண்ணை நிலங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற 10ஆம் திகதி வரை அரசு இறுதிக்கெடு விதித்திருந்தது. ஆனால், அவர்கள் சரணடைய மறுத்து விட்டனர்.

அந்த காலக்கெடு நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில் பக்ஹவுஸ் நகரின் மீது அமெரிக்காவை சேர்ந்த போர் விமானங்கள் தலைமையில் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 50 பேர் உயிரிழந்ததாக சிரியா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## எதியோப்பிய விமானத்தின் கறுப்புப்பெட்டி கண்டுபிடிப்பு



(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் 157 பேர் உயிரிழக்க காரணமாக அமைந்த போயிங் 737 விமானத்தின் கறுப்புப்பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியா தலைநகர் அடிஸ்அபாபாவில்இருந்து கென்யா தலைநகர் நைரோபி நோக்கிச் சென்ற போயிங் 737 மேக்ஸ்-8 ரக விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விழுந்து நொறுங்கிய விபத்தில் அதில் இருந்த 149 பயணிகள் உட்பட 157 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், துரதிர்ஷ்டவசமான இந்த விபத்தில் சிக்கிய அந்த விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டதாக எதியோப்பியா நாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் பதிவாகியுள்ள விமானியின் உரையாடல்களை வைத்து விபத்துக்கான காரணம் என்ன? என்பதை கண்டுபிடிக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## வெனிசுவெலாவில் மின்சாரத் தட்டுப்பாடு

## சிறுநீரக நோயாளிகளின் மரணத்திற்கு அரசாங்கமே முழுக் காரணமாகும்

## ஜிவான் கெய்டோ குற்றச்சாட்டு

(கராகஸ்)

வெனிசுவெலாவில் நிலவி வரும் கடும் மின்சார தட்டுப்பாட்டினால் 15 நோயாளிகள் உயிரிழந்துள்ள நிலையில் அதற்கு அரசாங்கமே காரணம் என அந்நாட்டு எதிர்க்கட்சி தலைவரான ஜுவான் கெய்டோ சாடியுள்ளார்.

மின்சாரமின்றி வெனிசுவெலாவில் பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ள நிலையில் ஜுவான் கெய்டோ நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களை சந்தித்தார். இதன்போதே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் .

நாட்டில் உள்ள 16 மாநிலங்கள் சிறிதும் மின்சாரம் இன்றி உள்ளன. 6 மாநிலங்களில் பகுதியளவு மின்சாரம் காணப்படுகின்றது. மின்சாரமின்றி சிகிச்சை பெற வழியின்றி 15 சிறுநீரக நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். மின்சாரமின்மையால் தனியார் துறை 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழந்துள்ளது.

தெற்கு அமெரிக்க நாடான வெனிசுவெலாவில் கடந்த வாரம் மின்சாரம் 70 வீதமாக குறைவடைந்தது. அத்தோடு வைத்திய சிகிச்சைகள் பாதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது. எனினும் அரசாங்கம் மக்களை மீட்க தயாராக இல்லை. இங்கு அடிப்படை பொருட்களையேனும்பெற முடியாத நிலை காணப்படுகின்றது என கெய்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சார தட்டுப்பாடு காரணமாக அங்குள்ள, 'டயாலிசிஸ்' எனப்படும் சிறுநீர் சுத்திகரிப்பு சிகிச்சை மையங்கள் முழுவதுமாக முடங்கியுள்ளன. இதன் காரணமாக நோயினால் அதிகளவு பாதிப்புக்குள்ளாகி இருந்த சிறுநீரக நோயாளிகள் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெனிசுவெலாவின் ஜனாதிபதியாக நிக்கோலஸ் மதுரோ பதவி வகிக்கும் நிலையில் வெனிசுவெலா எதிர்க்கட்சித் தலைவரும், தேசிய சட்டமன்றத் தலைவருமான ஜுவான் கெய்டோ தம்மை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக்கொண்டிருக்கிறார். இதனால் அந்நாட்டில் அரசியல் குழப்பம் நீடித்து வருகின்றது.

வெனிசுவெலா நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் மின் உற்பத்தி உட்பட பொருளாதார நிலை மோசமாக பதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பயங்கரவாத முகாம்களை பாகிஸ்தான் அழிக்க வேண்டும்

### சமூக ஆர்வலர்கள் ஐ.நா.கூட்டத்தில் வலியுறுத்து



(ஜெனிவா)

ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் பிற பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்களை பாகிஸ்தான் அரசு அழிக்க வேண்டும் என ஆக்கிரமிப்பு காஷ்மீரின் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் ஐ.நா. மனித உரிமைகள் சபை கூட்டம் நடைபெற்றது. இதையொட்டி, பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்வது தொடர்பான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற மனித உரிமை ஆர்வலர்கள், பயங்கரவாத அச்சுறுத்தல் ஒரு பிராந்தியத்தில் மட்டும் இல்லாமல் உலகம் முழுவதிலும் இருப்பதாகவும் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள், புல்வாமா தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தனர். மேலும், ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்களை பாகிஸ்தான் அரசு அழிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஐக்கிய காஷ்மீர் மக்கள் தேசிய கட்சி தலைவர் சர்தார் சவுகத் அலி காஷ்மீரி பேசும்போது, பாகிஸ்தான் இராணுவம்பயங்கரவாதிகளை பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிராக மறைமுகமாக போரை நடத்துவதாக குற்றம்சாட்டினார்.

'இதுபோன்று பயங்கரவாதத்தை பாகிஸ்தான் அரசு தொடர்ந்து ஊக்குவித்தால் நமது நாடு மதங்கள் மற்றும் இனங்கள் ஆயிரம் துண்டாக பிளவுபட்டுவிடும். எனவே பாகிஸ்தான் தனது மன நிலையை மாற்றி பயங்கரவாத முகாம்களை அழிக்கும்படி ஐ.நா. மனித உரிமைகள் சபையும் உலக நாடுகளும் வலியுறுத்தவேண்டும்' என்றும் அவர் தெரிவித்தார். (7)

## மசூத் அசாரை தீவிரவாதியாக அறிவிக்கும் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணலாம் - சீனா

(பீஜிங்)

மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கும் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என சீனா தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி இந்த பரிசீலனை எடுத்துக் கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்பட்டன. இந்த நேரத்தில் மேற்கண்ட கருத்தை சீனா கூறியுள்ளது.

மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்க, ஐ.நாவில் பலமுறை முயற்சித்தும் சீனாவின் தலையீட்டால் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனினும் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீதான நிலைப்பாட்டை சீனா இன்னும் அறிவிக்கவில்லை.

ஜெய்ஷ் இ முகமது இயக்க தலைவர் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கக் கோரி ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

இந்த நிலையில், ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கும் விவகாரத்தில் பேச்சுவார்த்தைகளின் மூலமே ஆக்கபூர்வமான தீர்வை காண முடியும் என்று சீனா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)


# ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவேண்டும்- மேர்வின்

(கொழும்பு)

ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றையே ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆசனத்தில் அமரச் செய்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு தகுந்த பாடத்தை ஐ.தே.க. புகட்ட வேண்டும். அதற்கு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை மாத்திரம் தோற்கடித்தால் போதாது. நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றையே கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கை



யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 50ரூபாய் மேலதிகக் கொடுப்பனவு

## அடுத்த வாரம் அமைச்சரவை பத்திரம்



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட 50 ரூபாய் மேலதிகக் கொடுப்பனவு மே மாதம் முதல் வழங்கப்படுமென அமைச்சர்களான பழனி திகாம்பரமும் நவீன் திசாநாயக்கவும் நேற்று முன்தினம் இணைந்து வாக்குறுதியளித்தனர்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தோட்டத் தொழிலாளிகளின் சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தத்துக்கு மேலதிகமாகவே அரசாங்கம் சுமார் ஒரு வருட காலத்துக்கு 50 ரூபாவை வழங்க முன்வந்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பாராளுமன்றத்தில் நேற்று



முன்தினம் அமைச்சர்களான நவீன் திஸாநாயக்கவும் பழனி திகாம்பரமும் இணைந்து நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் மேற்படி வாக்குறுதியை அளித்தனர். இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இராதாகிருஷ்ணன் மற்றும் திலகராஜ் எம்.பி. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டு ஒப்பந்தத்தினூடாக எதிர்பார்த்தளவு சம்பள அதிகரிப்பு இல்லாமை காரணமாக ஏமாற்றமடைந்துள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் கொடுப்பனவொன்றை வழங்க வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று 50 ரூபாய் மேலதிகக் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ளமைக்காக நாம் நிதி அமைச்சருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் நவீன் திஸாநாயக்க,

மே மாதம் முதல் ஒரு வருடத்துக்கு தோட்டத் தொழிலாளிகளின் அடிப்படைச் சம்பளத்துடன் 50 ரூபாய் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். இதனை தொடர்ந்தும் வழங்குவது குறித்து பின்னர் ஆராயப்படும்.

இலங்கை தேயிலை சபையிலிருந்து இதற்கான நிதியை நாம் பெற்றுக் கொள்ளவுள்ளோம். பின்னர் இந்நிதியை திறைசேரி தேயிலை சபைக்கு வழங்குமென எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (7)

# பெரும்பான்மை இல்லை ரணில் தடுமாற்றம்-விமல்

(கண்டி)

52 நாட்கள் அரசாங்கம் உருவாக்கப்பட்டதாலேயே, தேசிய அரசாங்கம் சிதைவடைந்ததெனத் தெரிவிக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி, வரவு-செலவுத் திட்டத்தை (பாதீட்டை) நிறைவேற்றுவதற்கு பெரும்பான்மை இல்லாமையால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடுமாறிக்கொண்டிருக்கின்றார் என்றார். கடந்த வருடம் ஒக்டோர் 26 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் உருவான 52 நாட்கள் அரசாங்கம், சரியான திட்டமிடல் இல்லாமலே கவிழ்ந்துவிட்டதென பலரும் கூறுகின்றனர் எனத் தெரிவித்த அவர், அதனாலேயே தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்க முடிந்தது எனவும் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மேலும் கருத்துரைத்த அவர், "முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த நேரத்தில் கிடைத்த பிரதமர் பதவியை இழக்க நேர்ந்தாலும் அன்று ஆட்சியை பொறுப்பேற்றதாலேயே இன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்துள்ளது" என்றார்.

அதனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் முறியடிக்கப்பட்டதோடு, 133 என்ற சாதாரண பெரும்பான்மைகூட இல்லாத பிரதமராக ஆக்கப்பட்டாரெனவும் தெரிவித்த அவர், தேசிய அரசாங்கம் கொண்டுவரவிருந்த பல இடைக்கால சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளோம் எனவும்



தெரிவித்தார்.

"தற்போது இடம்பெறும் ஐ.நா. அமர்வுகளில் இலங்கை சார்பில் கலந்துகொண்டுள்ள பிரதிநிதி, ஐ.நா. பரிந்துரைக்கமைவான சட்டதிட்டங்களை 52 நாட்கள் அரசாங்கத்தின் விளைவால் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனதென அறிவித்துள்ளார்".

இது இந்நாட்டு இராணுவத்தை ஆதரிக்கும் மக்கள் கண்ட வெற்றியெனவும் இதனாலேயே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் ரணில், தவித்துக் கொண்டிருப்பதாகவும் விமல் தெரிவித்தார். (இ-7)

# 5 இளம் அமைச்சர்களுக்கு ரஷ்யாவிடமிருந்து விருது

(கொழும்பு)

ரஷ்ய குடியரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச இளைஞர் மற்றும் மாணவர் விழாவின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கையின் 5 இளம் அரசியல்வாதிகளுக்கு, ரஷ்ய அரசினால் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது, கொழும்பில் அமைந்துள்ள ரஷ்ய கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரே, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் வீரசுமன வீரசிங்க, சோசலிச இளைஞர் சங்கத்தின் புபுது சமரவீர ஆகியோருக்கே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒப்புக்கொள்ளும் குணம்

விக்கிரம சோழன் என்று ஒரு ராஜா இருந்தாராம். அவர் ஒரு நாள் மாறுவேடம் போட்டுக் கொண்டு நகர் சோதனைக்காக புறப்பட்டார்.

சிறைச்சாலையிலே கைதிகள் எல்லாம் எப்படி இருக்கின்றார்கள் என்று பார்த்துவிட்டு வரலாம் என்று அந்தப் பக்கமாக போனார்.

பல கைதிகள் அடைபட்டுக் கிடந்தார்கள். அதில் ஒரு ஆளைக் கூப்பிட்டு "நீ ஏன் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாய்? என்று விசாரித்தார் ராஜா!

"நான் ஒரு வாடகை வீட்டிலே குடியிருந்தேன். அதை காலி செய்யச் சொன்னார்கள். வேறு வீடு கிடைக்கவில்லை. அதனாலே காலி செய்யாமல் இருந்தேன். அதற்காக என் பேரில் வழக்குப் போட்டு ஒரு வருடம் உள்ளே போட்டுவிட்டார்கள்!" என்றான் அந்த ஆள்! ராஜா இன்னொரு கைதியை கூப்பிட்டு "நீ எப்படி இங்கே வந்தாய் "என்று கேட்டார்.

"என் பேரிலேயும் தவறு ஒன்றும் இல்லை! ஒரு நாள் தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தேன். வழியிலே ஒரு தங்கச் சங்கிலி கிடந்தது. அநாதையாகக் கிடந்தது. அதனாலே அதை நான் எடுத்துக் கொண்டேன். அதை விற்கிறதுக்காகப் போனேன். அந்த இடத்திலே என்னைப் பிடித்துவிட்டார்கள்! திருடினேன் என்று சொல்லி தண்டனையும் கொடுத்துவிட்டார்கள்! " என்றான் அவன்.

ராஜா அடுத்தபடியாக இன்னொரு ஆளைக் கூப்பிட்டு விசாரித்தார்.

" ஐயா! எங்கள் ஊரிலே கணக்கு வழக்கு பார்த்துக் கொண்டு ஒரு ஆள் இருந்தார்"அவர் அடிக்கடி என்னிடம் ஏதாவது காசு வாங்கிக் கொண்டே இருப்பார்.

நானும் இடையிடையே கையிலே கிடைத்தது ஏதாவது கொடுத்துக் கொண்டு தான் வந்தேன்... ஒரு சமயம் கேட்டார்... நான் கையிலே இல்லை என்று சொன்னேன். அவருக்கு கோபம் வந்துவிட்டது. அன்றைக்கு இரவு... அவர் வீட்டு வைக்கோல் போர் பற்றிக் கொண்டு எரிந்துவிட்டது. அதை நான் தான் கொளுத்தினேன் என்று சொல்லி விட்டார். எல்லோரும் நம்பிவிட்டார்கள்! அதனாலே தான் நான் இங்கு வரவேண்டிய நிலை ஆகிவிட்டது! என்றான்.

ராஜா சளைக்கவில்லை. இன்னொரு ஆளையும் கூப்பிட்டு விசாரித்தார்... நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஒரு சின்ன கோயில் கட்டலாம் என்று நினைத்து பல பேரிடம் நன்கொடை வசூல் செய்தேன்.

பணம் கொடுத்தவர்கள் எல்லாம் இன்னொன்றையும் கொடுத்து விட்டார்கள்! அதாவது என் பேரில் புகாரையும் கொடுத்து விட்டார்கள். வசூல் செய்த பணத்தையெல்லாம் சாப்பிட்டேன் என்று சொல்லி என்னை இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டார்கள்! என்றான் அவன்!

இப்படி எல்லோருமே தான் ஒரு தப்பையும் செய்யவில்லை என்றும் அநியாயமாக சிறையில் கொண்டுவந்து அடைத்து விட்டார்கள் என்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ராஜா கடைசியாக வேறு ஒரு நபரிடம் பேனார்.

"நீ என்ன காரணத்திற்காக சிறைக்கு வந்தாய்?" என்றார். ஐயா நான் மிகவும் ஏழை. எனக்கு ஏழு பிள்ளைகள். வயதான அப்பா...அம்மா இருக்கிறார்கள். வேலை செய்தும் போதுமான கூலி கிடைக்கவில்லை! சில சமயத்திலே வேலையும் கிடைப்பதில்லை. பசிக் கொடுமை தாங்க முடியவில்லை! அதனாலே செய்யக் கூடாத ஒரு காரியத்தை செய்துவிட்டேன்! ஒரு செல்வந்தர் வீட்டிலே திருடிப் போட்டேன்! திருடுவது பெரிய குற்றம். புத்திகெட்டுப் போய் அப்படி நடந்துகொண்டேன்! அதனால் பிடிபட்டேன்! நியாயப்படி எனக்கு மூன்று வருடம் சிறை தண்டனை கிடைத்தது.

அதனாலே நான் இங்கே வருவதற்கு வேறு யாரும் காரணம் இல்லை! நான்தான் காரணம்! செய்த குற்றத்தை நினைத்து நான் தினமும் அழுது கொண்டிருக்கின்றேன்!" என்றான் அந்த ஆள்.

ராஜா உடனே அந்த சிறை அதிகாரியைக் கூப்பிட்டார். வேகமாக அவர் வந்து நின்றார். "இதோ பாருங்கள்! இங்கே வந்திருக்கின்றவர்கள் யாருமே ஒரு குற்றமும் செய்யாதவர்கள் !" இந்த ஒரு நபர் மட்டும் தான் குற்றம் செய்தவன். நல்லவர்கள் இருக்கின்ற இந்த இடத்தில் ஒரு பொல்லாதவன் இருக்கக் கூடாது! அதனாலே உடனே இவனை விடுதலை செய்து வெளியிலே அனுப்பிவிடுங்கள்! என்று உத்தரவு போட்டார். தவறை உணர்ந்தவன் வெளியிலே வந்துவிட்டான்.

குற்றத்தை ஒப்பு கொள்வது என்பது ஒரு பெரிய குணம். அதற்கு தைரியமும் வேண்டும். மனப்பக்குவமும் வேண்டும்.

இவை இரண்டும் உள்ள ஒருத்தர் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருந்தார். பக்கத்திலே இருந்தவர் "அண்ணே! நீங்கள் தான் வெளிப்படையாகப் பேசுறீங்கள்! உங்களுக்கு ஏன் இந்த நிலைமை?"என்று கேட்டார்.

அதுக்கு அவர் சொன்னார். "தம்பி! நான் எந்தப் பாவமும் செய்யவில்லை!"ஒரு நாள் எனக்கு செலவுக்கு 5000 ரூபாய் தேவைப்பட்டது...

அதுக்காக வேறு ஒன்றும் செய்யவில்லை... வீட்டுக்கு வெளியே இருந்து தான் அதை எடுத்துக்கொண்டேன். அது பெரிய தப்பு என்று சொல்லி என்னை சிறையிலே தள்ளிவிட்டார்கள்! என்றார். எங்கள் சொந்தச்செலவுக்கு வீட்டிலேயிருந்து பணம் எடுத்துக் கொள்வது கூட தப்பா...? என்று கேட்டார் அவர்.

" ஆமாம் அப்படித்தான் சொல்கிறது சட்டம்!" ஏனென்றால் நான் பணம் எடுத்துக் கொண்டது எங்கள் வீட்டிலிருந்து இல்லை! எதிர்த்த வீட்டிலேயிருந்து! என்றார் அவர்!

# தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டின் அரசியல்போக்கு முஸ்லிம்களின் ஒற்றுமையினால் மாற்றியமைக்கப்பட முடியும். வட, கிழக்கிலும் வேறு இடங்களிலும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டால் சிறந்தொரு அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நகர திட்டமிடல் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கைகாட்டி சந்தி சிறுவர் பூங்கா, கல்லரிச்சல் வீதி மற்றும் சிறுவர் பூங்கா, அன்வர் இஸ்மாயில் மாவத்தை காபட் வீதி ஆகியவற்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் உரையாற்றியதாவது,

இது தேர்தல் வருடமாகும். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நடக்கவிருக்கும் தேர்தலை தாமதப்படுத்தினாலும் இந்த வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தலுக்காவது நாம் முகம் கொடுக்க வேண்டும். இந்த தேர்தல் நாட்டின் அரசியலையே தலைகீழாக மாற்றுகின்ற தேர்தலாக இருக்கும். இதன்போது மீண்டும் ஆட்சியை தீர்மானிக்கின்ற சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கும். அதைத் தீர்மானிப்பது மக்களாகிய நீங்கள்தான்.

முஸ்லிம் கட்சிகள் தேர்தலில் பிரிந்துநின்று ஆசனங்களை வென்றாலும், சமூகம் தோற்றுப் போகக்கூடாது என்பது எல்லோருடைய அடிப்படை விருப்பமாக இருக்கிறது. நாட்டின் அரசியல் போக்கு முஸ்லிம்களின் ஒற்றுமையினால் மாற்றியமைக்கப்பட முடியும். இதன்போது தமிழ் மக்களும் எங்களுடன் சேர்ந்து கொண்டால் இன்னும் ஒருபடி மேலே செல்லலாம்.

வட, கிழக்கிலும் வெளியிலும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டால் சிறந்தொரு அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப முடியும். ஆனால், இப்போது சில்லறைப் பிரச்சினைகள் பல தலைதூக்கத் தொடங்கியுள்ளன. அரசியல் வாதிகள் தனிப்பட்ட ரீதியில் ஆவேசப்பட்டு பேசுவதனால் இரு சமூகங்களும் பிரிந்துவிடக்கூடாது.

இரு சமூகங்களின் மத்தியிலுள்ள பிரச்சினைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து தனிப்பட்ட முறையில் யாரும் இந்தப் பிரச்சினைகளை தீர்வு காண முடியாது என மேலும் தெரிவித்தார். (7)

## நாய் பாய்ந்ததில் வயோதிபர் பலி

(பானகமுவ)

ரிதீகம, பானகமுவ பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்றின் மீது நாய் பாய்ந்ததில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த நபர் ரிதீகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தெமட்டகல்ல பகுதியைச் சேர்ந்த 81 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## விமானத்தில் பெண் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிலிருந்து இலங்கை நோக்கி வருகை தந்த விமானத்தில் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை நோக்கி வருகை தந்த, ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (7)

# பாரிய இழுபறி நிலையில் பெரமுன - சு.க. கூட்டணி

## சாகர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவினிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டமைப்பு தொடர்பில் முன்னெடுக்கின்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடற்ற தன்மையே காணப்படுகின்றது.

இதன் காரணமாக இழுபறி நிலைமை தொடர்கின்றது என பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பரந்துபட்ட புதிய கூட்டணியமைத்தல் தொடர்பில் இரண்டு தரப்பிலும் காணப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பில் வினவிய பொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் புதிய கூட்டணி தொடர்பில் ஒரு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. எவ்வாறாயினும் நாங்கள் ஒருபோதும் தலைமைத்துவத்தினையும், கட்சியின் மொட்டு சின்னத்தினையும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

பலம் வாய்ந்த ஒரு கட்சியின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில் பொதுஜன பெரமுனவிற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### வர்த்தகர் சியாம் கொலை

# வாஸின் மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிரபல வர்த்தகர் முஹமட் சியாம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், வழங்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உட்பட 6 பேர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி அழைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு நீதியரசர்களான சிசிர தி ஆப்ரு, பிரியந்த ஜெயவர்தன, விஜித மலல்கொட, பிரீதி பத்மன் சுரசேன மற்றும் பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது இந்த வழக்கை விசாரிப்பதற்கு திகதி அறிவிக்குமாறு முறைப்பாட்டாளர்கள் சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். இதனையடுத்து மனுவை எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகர் முஹமட் சியாம் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது என்றும் இதன் காரணமாக அந்தக் குற்றங்களில் இருந்து தம்மை குற்றமற்றவர்களாக விடுதலை செய்ய உத்தரவிடுமாறும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது மகன் உள்ளிட்ட அறுவரும் தமது மேன்முறையீட்டு மனுவில் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எமது நாடு முன்பிருந்ததை விட அதளபாதாளத்தில் வீழ்ந்துள்ளது

## அஜித் நிவாட் கப்ரால் கவலை

(கொழும்பு)

நாட்டில் கடந்த நான்கு வருடங்களில் ஆயிரத்து 500 பில்லியன் கடன் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "கடனை செலுத்துவதில் சிக்கல் காணப்படுவதாக நமது நாட்டின் பிரதமர் கூறுகின்றார்.

எனினும் முன்னரை விட நாடு தற்போது அதளபாதாளத்தில் வீழ்ந்துள்ளது" என மேலும் தெரிவித்தார். (7)



# பொலிஸ் அதிகாரியை மோதியவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(பொரளை)

பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியை டிபெண்டர் ரக வாகனத்தில் மோதிவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

டிபெண்டர் வாகனத்தை செலுத்திய சாரதியே இவ்வாறு எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்ட பின்னர் அதில் ஏழு பேர், இரண்டு 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 95 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 180 | 200 |
| தக்காளி | 60 | 60 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 80 | 60 |
| கோவா | 50 | 30 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 35 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 29 | 400 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 100 |
| கீரை-1பிடி | 40 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 100 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 130 | 150 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 80 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 20 |
| ஈரப்பலா | – | – | 110 | 80 |

# அமெரிக்க நிறுவனத்தால் நாட்டிற்கு அச்சுறுத்தல்

## விமல் எச்சரிக்கை



(கொழும்பு)

அலரி மாளிகையில், புதிதாகச் செயற்படும் அமெரிக்க நிறுவனமான மிலேனியம் சவால் நிதியத்தினால், நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர்,

"அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், கீழ் செயறபடும் மிலேனியம் சவால் நிதியத்தின் நோக்கம், காணி வங்கிச் சட்டம் என்ற பெயரில், எமது நாட்டின் காணிச் சட்டங்களை மாற்றுவது தான்.

அனைத்து அரச காணிகளையும் இந்த காணி வங்கியின் கீழ் கொண்டு வரவும், அந்தக் காணிகளை வெளிநாடுகள் உள்ளிட்ட எவருக்கும் வழங்குவதற்கும் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள்.

கைத்தொழில் வலயத்துக்காக, திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றியுள்ள நிலங்கள் உள்ளிட்ட 7 மாவட்டங்களின் 33 ஆயிரம் ஏக்கர் நிலங்களை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மின்சார தொடருந்து சேவை முன்மொழியப்பட்டுள்ளது. இந்த 7 மாவட்டங்களின் ஊடாகவும் உயர்சக்தி மின்சார இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

அமெரிக்காவின் ஒழுங்கு முறைகளுக்கு இணங்கும் நிறுவனங்கள் மாத்திரமே, கைத்தொழில் வலயங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில், முதலீடு செய்ய அனுமதிக்கப்படும்.

திருகோணமலை துறைமுகத்துக்கு அப்பால், 6000 அமெரிக்கப் படையினர் மற்றும் 100 விமானங்களுடன் அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

அமெரிக்க விநியோக மையங்களுக்கு எமது நிலங்களை அரசாங்கம் வழங்கப் போகிறதா?

வெளிநாட்டவர்களுக்கு எமது காணிகளை வழங்கினால், எமது நாட்டு மக்களின் நிலை என்னவாகும்?

இதுமாத்திரமல்ல, பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை துறைமுகம், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் ஆகியவற்றையும் இந்தியாவுக்கு வழங்க இந்த அரசாங்கம் தயாராகி வருகிறது.

விரைவில் எமது மக்கள் வெளிநாட்டவர்களின் அடிமையாகி விடுவார்கள்" என்றும் அவர் எச்சரித்துள்ளார். (7)

# தமிழர்களுக்கு நன்மை தராத வரவு-செலவுத்திட்டத்தை கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும்

## விந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் தமிழ் மக்களுக்கு நன்மை தராவிட்டால், அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்க வேண்டுமென அக்கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் என்ற புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒத்ததாகவும்



அதைவிட மிகவும் வலுவானதாகவும் உள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும்.

அத்தோடு 2019ஆம் ஆண்டுக்குரிய வரவு- செலவுத் திட்டம் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காதவிடத்து அதனை எதிர்த்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வாக்களிக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (7)



# வடக்கில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட இ.போ.ச. ஊழியர்களுக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

வடக்கில் 10வருடங்களுக்கு மேற்பட்ட இ.போ.ச. ஊழியர்களுக்கு பதவியுயர்வுகளை இவ்வருடத்தில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அது தொடர்பில் பிரச்சினைகள் அல்லது எவருக்கும் அநீதி இழைக்கப்பட்டிருந்தால் எழுத்து மூலம் அறியத் தருமாறு அவர் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக் கொண்டார். (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1669

### ஆரோன்

வண்டி ஓட்டிக்கொண்டே செல்போன் பேசும் போது நேரம் மிச்சமாகிறது... நமக்கு அல்ல எமனுக்கு



### பிரகலாதன்

வாஸ்து பார்த்து தலைவைத்து படுத்தவனெல்லாம் இப்ப சுவிட்ச் போட் பக்கம் தலை வைச்சுப்படுக்கிறான்... சார்ஜ் போடணும்ல



### கவிஷ்னா

மனைவி: எங்க போறீங்க
கணவன்: தற்கொலை பண்ணிக்க
மனைவி: கூடவே பை கொண்டு போங்க..
திடீர்னு முடிவை மாத்திட்டா வரும்போது வெங்காயமும் தக்காளியும் வாங்கிட்டு வாங்க



### யாதவன்

பாட்டி முந்தானையில் முடிந்த காசு வாங்கும் மகிழ்ச்சி... இப்ப ஏ.ரி.எம்மில் ஆயிரம் ஆயிரமாக எடுத்தாலும் அந்த சந்தோசம் தருவதில்லை



### உலகநாதன்

சம்பாதிக்க ஆரம்பிக்காத வரை எல்லாப் பண்டிகையையும் சந்தோசமாகக் கொண்டாடினோம்



### கிருஷ்ணா

காசு காகத்திடம் இருந்தால்கூட காக்கா பிடிப்பார்கள் மனிதர்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

கோப்பி, தேயிலை பெருந்தோட்டக்காரரும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் கொண்ட ஐரோப்பிய வர்த்தக சமூகத்தினரும் இலங்கை முழுவதும் புகையிரத சேவை அமைக்கப்படல் வேண்டும் எனத் தீவிரமாகக் கோரினர்.

கொழும்பிலிருந்து கண்டிக்கு ஒரு புகையிரதப் பாதையை அமைக்கும் நோக்கத்துடன் 1845 இல் இலங்கை புகையிரதக் கம்பனி ஒன்று உருவாக்கப்பட்டது. இப்பாதையை அமைக்கும் பணி 1867 இல் பூர்த்தியானபோது அப்பாதை தொடர்ந்தும் விரிவாக்கம் பெற்றது.

அரசாங்க நிதிக்களஞ்சியத்திற்கு ஈற்றில் வருவாயை வழங்கும் கோப்பி, இறப்பர் தேயிலைப் பெருந்தோட்டக்காரரை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் முதலில் கொழும்பிலிருந்து மலைநாட்டுக்குப் புகையிரதப் பாதையை அமைத்தது.


பின்னர் தெங்குப் பயிர்ச் செய்கையையும் வேறு பெரும் கைத்தொழில்களையும் ஊக்குவிக்கும் வகையில் பிரதான தெற்குக் கரையோரப் பிரதேசங்களில் புகையிரதப் பாதை அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

இயல்பாகவே இப்புகையிரத சேவை பொதுமக்களுக்குப் பயனுள்ளதொரு போக்குவரத்துச் சேவையை வழங்கியது. வடமாகாணத்திற்குப் புகையிரதப் பாதை அமைக்கும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மலைநாட்டிலும் தெற்குக் கரையோரத்திலும் காணப்பட்ட பெருந்தோட்டங்கள், அபிவிருத்தியடைந்து வரும் கைத்தொழில்கள் போன்று வடக்கில் இல்லாமை ஒருவேளை இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

வடக்கிற்குப் புகையிரதப் பாதை அமைப்பதற்கான செலவு அப்பிரதேசத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைவிட அதிகம் என நம்பிய அரசாங்கம் இப்பாதையை அமைப்பதில் பெரும்பாலும் அசிரத்தை காட்டியது. 1894 இந்து ஓகன் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்திற்குப் புகையிரத சேவை அத்தியாவசியம் என வலியுறுத்திய மக்கள் தேசாதிபதி சேர் ஆதர் கோடனுக்கு ஒரு மனுவை அனுப்பினர். புகையிரத ஆணைக்குழுப் பொறியியலாளரின் இந்த வேலைக்கான விரிவான வரவு-செலவு அறிக்கையின் விளைவாக இறுதியாக இவ்விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டார்.




“யாழ்ப்பாணத்திற்குப் புகையிரத சேவை அத்தியாவசியம் என வலியுறுத்திய மக்கள் தேசாதிபதி சேர் ஆதர் கோடனுக்கு ஒரு மனுவை அனுப்பினர். புகையிரதஆணைக்குழுப்பொறியியலாளரின் இந்த வேலைக்கான விரிவான வரவு- செலவு அறிக்கையின் விளைவாக இறுதியாக இவ் விண்ணப்பத்தை நிராகரித்தார்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இருந்தபோதிலும் தனது பதவியின் இறுதிக்காலத்தில் (1890 களில்) தேசாதிபதி வடக்கிற்கு ஒரு புகையிரதச் சேவையை வழங்குவதற்கான சாத்தியத்தை ஆராய்வதற்கு ஓர் ஆணைக்குழுவை அமைத்து அக்குழுவின் முடிவை அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கையாகச் சமர்ப்பிக்கும்படி பணித்தார்.

புதிய தேசாதிபதியான சேர் ஆதர் ஹவ்லொக் (Sir Arthur Havelock) யாழ்ப்பாணத்திற்கு 1890 செப்டெம்பரில் வருகைதந்து அங்கு தமிழரின் புகையிரத சேவை விரிவாக்கத்திற்கான கோரிக்கையை கேட்டறிந்த போது இச்சேவையை அமைப்பதற்குத் தன்னால் முடிந்த அளவுக்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

ஒரு புதிய ஆணைக்குழு அமைக்கப்பட்டு அதன் அங்கத்தவர்களான எப்.ஆர். சான்டே, ரி.என்.கிறிஸ்ரி, பொ. இராமநாதன், எச்.போயிஸ், டபிள்யூ. சிமிஸ் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு நிலைமையை ஆராய்ந்து தேசாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணிக்கப்பட்டனர்.

ஆயினும் ஆணைக்குழுவினரில் சிலர் இங்கிலாந்தில்கூடி யாழ்ப்பாணத்திற்கு புகையிரத சேவையை விஸ்தரிப்பது பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றதென முடிவு செய்து இம்முடிவை தேசாதிபதிக்கு அறிவித்தனர்.

இதேசமயம் யாழ்ப்பாணத்திற்குப் புகையிரத சேவையை விஸ்தரிக்கும் பிரேரணை சட்ட நிருபண சபையில் முன் வைக்கப்பட்டது. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இதற்கு வாக்களிக்க இதை எதிர்த்து வாக்களித்த உத்தியோகபூர்வ அங்கத்தவர்களினால் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

ஒரு காலம் யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவையை நிறுவுவதற்கு உதவுவார் என நம்பப்பட்ட ஹவ்லொக் இத்திட்டம் சாத்தியமற்றது என்ற காரணத்தினால் அதைக் கைவிட்டதுமன்றி தனக்குப் பின் பதவிக்கு வரவிருப்போருக்கும் இதையிட்டு எச்சரிக்கை செய்துமிருந்தார்.

1893 இல் சட்ட நிருபண சபைக்கு வழங்கிய பிரியாவிடை உரையில், வடக்கிற்கு புகையிரதச் சேவையை அமைப்பது பொருளாதாரத் தோல்வியை ஏற்படுத்தி குடியேற்ற நாட்டுக்கு ஒரு சுமையாக இருக்கும் என எச்சரிக்கவும் செய்தார்.

ஈற்றில் எவரைத் தமிழர் தமது கோரிக்கையின் நாயகனாக எண்ணியிருந்தனரோ அவரே சேர். ஆதர் கோடனை வடக் கிற்கு புகையிரத சேவையை விஸ்தரிப்பதற்கு அதிக முட்டுக்கட்டையாக இருந்தார்.

வடக்கிற்கான புகையிரத சேவையை அரசாங்கம் அமைக்கத் தமது பணத்தைச் செலவழிக்குமானால் அது பெருந்தோட்டப் பிரதேசங்களில் புகையிரத சேவை விஸ்தரிக்கப்படுவதற்கு தடையாக அமையும் என நம்பிய இலங்கைப் பெருந்தோட்டச் சொந்தக்காரரும் எதிர்ப்புத் தெரிவித்ததனால் இக்கோரிக்கை மேலும் தடைப்பட்டது.

(தொடரும்)

# வரவு-செலவுத்திட்டம் - 2019

## "என்ரர்பிறைஸ் ஸ்ரீலங்கா – மக்களை வலுவூட்டலும் வறியோரைப் பராமரித்தலும்" 06

## காணாமற்போனோருக்கு தீர்வுகிடைக்கும் வரை மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

இவ்வாறான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு இழப்பீட்டினை சிறந்த மற்றும் பயனுறுதி மிக்க முறையினூடாக உடனடியாக வழங்கி அவர்களது பாதிப்புக்களை குறைப்பதற்காக நாம் ரூபா. 20,000 மில்லியன் அனர்த்த முகாமைத்துவ எதிர்பாரா செலவின நிதியத்திற்கான இடைக்காலக் கொடுப்பனவாக ஒதுக்கீடு செய்கின்றோம்.

❖இலங்கை உலக இடர் அபாய சுட்டியினால் இயற்கை அனர்த்தங்களினால் அதிகளவு அபாயத்திற்குள்ளாகும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களில் நாட்டின் ஒரு பகுதி கடுமையான வரட்சிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் அதேவேளை அக்காலப்பகுதியில் ஏனைய பிரதேசங்கள் கடுமையான வெள்ளப் பெருக்கினை எதிர்கொண்ட அனுபவங்களையும் நாம் கண்டுள்ளோம்.

ஆகவே இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் அவசிய தேவையாகவுள்ளது. எனவே, அரசாங்கத்தினால் 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கை அனர்த்த காப்பீட்டுத் திட்டத்தினை வலுப்படுத்தும் நோக்கில் மேலதிகமாக ரூபா 1,000 மில்லியன் இவ்வருடத்திலும் ஒதுக்கீடு செய்வதன் மூலம் வருடாந்த அரச காப்பீட்டுப் பெறுமதி ரூபா. 500 மில்லியனிலிருந்து ரூபா 1,500 மில்லியனாக அதிகரிக்கப்படும்.

❖"கம்பெரலிய" அபிவிருத்தி முன்னெடுப்புக்கு மேலதிகமாக பிரத்தியேகமாக உலர் வலய அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்காகவும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள மற்றும் முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சுக்கு ரூபா. 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

❖பிளாஸ்ரிக் பைகள் பொதியிடல், பிளாஸ்ரிக் போத்தல்கள், மதிய உணவுத் தாள்கள் என்பன போன்ற ஒரு தடவை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்களின் பெருக்கம் கணிசமான அளவு சுற்றுச் சூழல் பாதிப்பினை அதிகரித்துள்ளது. இத்துறையில் பொருத்தமான ஒழுங்கு விதிகளை முதற்படியாக அறிமுகப்படுத்துவதுடன், எந்த நிறுவனமாயினும் ஒரு தடவை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் உற்பத்தி மற்றும் இறக்குமதி தொடர்பாக 2019 செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் பதிவு செய் யப்படல் வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

❖இலங்கையானது கடல்சார் வளத்தினை நிலைபேறாக பாதுகாக்கும் முகமாக திரண்ட கடல்சார பாதுகாப்பு திட்டமொன்றினை அபிவிருத்தி செய்யும். இலங்கையில் பிரத்தியேகமான பொருளாதார வலயத்தினை கடல்சார் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்படும் வரை நாங்கள் முன்னோக்கிச் செல்வோம். இது கடல் உயிரியல் பல்வகைத் தன்மையினை நிலைபேறான முறையில் முகாமை செய்வதனூடாக நாட்டின் சமூகப் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

### கலை, கலாசாரம் மற்றும் சமயம்

❖இலங்கைத் திருநாட்டின் கலாசார விழுமியங்கள் மற்றும் எமது சமூகத்தினை மெருகேற்றல் தொடர்பில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் ஆற்றிவரும் பங்களிப்பினை நாங்கள் மெச்சுகின்றோம். எமது அரசாங்கமானது நாட்டின் கலை, கலாசாரம் என்பவற்றின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றது. கலைஞர்கள் தொடர்ந்தும் தமது படைப்புக்களின் மூலம் நன்மை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கலைஞர்களின் படைப்புக்கள் ஒளி,ஒலிபரப்பு அல்லது வெளியீடு செய்யப்படும் போது அதற்கான வேத்துரிமை கொடுப்பனவினை பெற்றுக் கொடுப்பதற்கான நியாயமானதொரு திட்டத்தினை நாங்கள் அறிமுகம் செய்து அமுல்படுத்தவுள்ளோம். இது அவர்களின் படைப்புக்களை பாதுகாப்பதுடன், அவர்களுக்கு தொடர்ச்சியான வருமான மூலத்தையும் பெற்றுக் கொடுக்கின்றது. இச் செயற்றிட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக ரூபா 50,000 வரையிலான மாதாந்த வேத்துரிமை வருமானமானது நிறுத்தி வைக்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, "கம்பெரலிய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை புனர்நிர்மாணம் செய்யும் வேலையை ஆரம்பித்துள்ளோம். 2019 ஆம் ஆண்டு வழிபாட்டுத் தலமொன்றுக்கான ஒதுக்கீட்டினை 500,000 ரூபாயிலிருந்து ஒரு மில்லியன் வரை அதிகரித்துள்ளோம். (விளக்கக்குறிப்பு III (அ)-10)

❖"கம்பெரலிய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மத வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய மின்கலங்கள் பெற்றுக் கொடுக்கப்படும். இதன்மூலம் அவற்றின் மின்சாரச் செலவானது குறைக்கப்படுவதுடன், தேசிய மின்கட்டமைப்புக்கான சுமையினையும் குறைக்கின்றது. (விளக்கக் குறிப்பு III (அ)-11)



❖மடு தேவாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியன் பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ஜோன் டீ. சில்வா கலையரங்கமானது நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டு புனரமைப்பு வேலைகளானது 2020 இல் பூர்த்தி செய்யப்படும்.

❖ தேசிய கலாபவனம் நவீனமயப்படுத்தப்பட்டு நவீன கலைகளுக்கான பிரத்தியேகப் பகுதியொன்றும்உருவாக்கப்படும்

❖மொறட்டுவையில் உலகத் தரத்திலான கவின் கலை நிலையமொன்றினை நிர்மா ணிப்பதற்கான வேலைகள் 2019 ஆம் ஆண்டில்ஆரம்பிக்கப்படும்.

### பொருளாதார வலுவூட்டலின் ஊடாக நல்லிணக்கம்

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, வடக்கு- கிழக்கில் எமது மக்கள் முகங் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பன்முக உபாயத்தினை முன்னெடுத்தோம். எமது உபாயமானது நிலைபேறான வாழ்வாதாரம் அதிகம் கடன்பட்டுள்ள மற்றும் வலுவிழந்தோர்க்கு உதவியளித்தல் போன்ற நோக்கங்களினால் வழிப்படுத்தப்பட்டது. அனைத்துப் பங்குதாரர்களும் நீதி, கடந்தகால வன்முறைகள் மீண்டும் இடம்பெறாது என்ற உறுதி ஆகியவற்றைக் கொண்ட அரசாங்கத்தின் வேலைச் சட்டகத்தின் அர்ப்பணிப்பினால் உறுதிப்படுத்தப்படுகின்றனர். வட மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான வேலைச் சட்டகமானது அனைத்துப் பங்குதாரர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பங்குபற்றலுடன் ஆரம்பிக்கின்றோம். இதனை ஒரு உறுதியான நடவடிக்கைத் திட்டமாக மாற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் வட மாகாணத்திலுள்ள அனைத்துப் பிரஜைகளும் பயனடைவர். நாங்கள் இவ்வேலைச் சட்டகம் இவ்வாறுத்தினை இதே போல் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். தேசியமுயற்சியில்பங்குபற்றுமாறு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலு வலகத்திற்கு அழைப்பு விடுக்கப்படும்.

❖ இப்பிரதேசத்தில் நாம் எடுக்கும் முயற்சிகளில் நிலைபேற்றுத் தன்மையை உறுதி செய்வதற்கு எமது நல்லிணக்க முயற்சிகளானது மிகவும் உறுதியான மற்றும் அர்த்தமுள்ள வகையில் ஒத்தி வைக்கப்படல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பிரதமரின் அலுவலகத்தில் இயங்கும் நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகத்தின் மூலம் விழிப்புணர்வு மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சிக்காக ரூபா. 200 மில்லியனை ஒதுக்குவதற்கும் முன்மொழிகின்றேன்.

❖நட்டஈட்டு அலுவலக சட்டமூலமானது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டு ஆரம்பமாகும். காரியாலயத்திற்கு அவசியமான ஆளணி மற்றும் உரிய வளங்கள் போதுமானளவு பெற்றுக் கொடுக்கப்படும்.

❖காணாமல்போனோர் அலுவலகத்திற்கு போதுமான வளங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு நாடு பூராகவும் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கும் மற்றும் காணாமற்போனமைக்கான சான்றிதழ் பெற் றுக் கொண்ட நடவடிக்கைகளின் போது காணாமற் போன இராணுவம் மற்றும் பொலிஸார் உள்ளடங்கலாக தேவையான உதவிகள் வழங்கப்படும். காணாமல் போன அலுவலகம் உருவாக்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் மாதாந்தம் 6,000 ரூபா கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படும். இவர்களின் குடும்பங்களுக்கு "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" கடன் திட்டத்தின் கீழ் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்படும் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றில் இணைந்து கொள்வதற்கும் விசேட முன்னுரிமையளிக்கப்படும்


❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, வடக்கு- கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தும் முகமாக, இரண்டு வருட காலப் பகுதியில் ரூபா 5,000 மில்லியன் முதலீட்டில் துரித அபிவிருத்திக்காக "பனை நிதியம்" உருவாக்கப்படும். இதற்கு பங்களிப்புச் செய்யுமாறு நலன் விரும்பிகள், கொடை வழங்குநர்கள், விசேடமாக புலம் பெயர்ந்து வாழ்வோர் போன்றவர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இந்நிதியானது திறைசேரியினால் நிர்வகிக்கப்படும். இந்நிதியானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபரினூடாக பயன்படுத்தப்படும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இந்நிதியானது மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை, இளைஞர் வேலையின்மை போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சிவில் சமூக உளவள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

❖ கிராமியப் பொருளாதாரத்தில் 50 சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் துரிதமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் போதுமான வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்குமாக 2018 இல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிடும் படியான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(தொடரும்..)

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1



02

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அரசகாணிகளுக்கானநில அளவை வரைபடங்களும் 'பிம்சவிய' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தனியார் காணிகளுக் கான நிலஅளவை வரைபடங்களும் நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படுகின்றது. பிரதேச மற்றும் மாவட்ட காணிப் பயன்பாட்டுடன் தொடர் புடைய திட்டங்கள் வகுக்கும் பணிகள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் காணிகளின் தகுநிலையைத் தீர்மானிக் கும் பணிகள் காணி உபயோக கொள் கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

**காணி அமைச்சும் அதன் கீழ்உள்ள திணைக்களங்களான காணி ஆணையாளர் நாய கத்தின் திணைக்களம், காணி நிர்ணயத் திணைக் களம், நில அளவைத் திணைக் களம் போன்றவை நாட்டின் நீடு நிலைக்கக்கூடிய அபி விருத்திக்காக சேவை ஆற்றி வருகின்றன.**

நில அளவையாளர்களைப் பதிவு செய்தல், பதிவுசெய்யப்பட்ட நில அளவை யாளர்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடத் தில் தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணிச் செல்லல் முதலான நோக்கங் களைப் பிரதானமாகக் கொண்டு 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடு களின் பிரகாரம் நில அளவைச் சபை 2003 இல் நிறுவப்பட்டது.

அத்துடன் நிலஅளவைத் திணைக் களத்தின் பயிற்சி நிறுவனமான தியத் தலாவையில் அமைந்துள்ள நில அளவை மற்றும் படமாக்கல் நிறுவனம் நில அளவை மற்றும் படமாக்கல் ஆகிய விடயப் பரப்புகள் தொடர்பாக பரிபூரண அறிவையும் அனுபவங்களையும் நில அளவைத் திணைக்கள மாணவர்க ளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அர்ப் பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

**2015ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதிய அதிவிஷே வர்த்தமானி மூலம் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை யும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவும் காணி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன.**

இதற்கு மேலதிகமாக கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையும் 1972 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட் டத்தின் கீழ் நிறுவப்பட்ட காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவையும் இலங் கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 2015ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் காணி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதற்கமைய காணி அமைச்சு உட்பட அதன் கீழ் உள்ள திணைக்களங்களும் நாட்டின் நீடு நிலைக்கக்கூடிய அபிவி ருத்திக்காக சிறந்த சேவையை நிறை வேற்றி வருகின்றது.

**➢காணி ஆணையாளர் நாய கத் திணைக்களத்தின் தொழிற் பாடு என்ன?**

பிரித்தானியர் காலப்பகுதியினுள் ஈர வலயத்திலிருந்த காணிகளில் தேயி லைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்ப ட்டமை, உலர் வலயத்தின் நீர்ப்பாசன முறைமையில் பின்னடைவுகள் ஏற்பட் டமை, நெற் செய்கைக்கு உரிய கவனம் செலுத்தப்படாமை, தன்னிறைவுப் பொரு ளாதாரத்திற்குப் பதிலாக வர்த்தகப் பொரு ளாதாரப் போக்குக்கு முன்னுரிமையளி க்கப்பட்டமை, உலக மகாயுத்தத்துடன் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை முதலிய பல பிரச்சினைகளுக்கு இந்நாட்டு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்தது. இதன் நிமித் தம், இந்த நாட்டைப் பிரதிநிதிப்படுத்திய அரசபேரவையின் பிரதிநிதிகள் இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி யமை, இன்னும் உணவு உற்பத்திற் கான துரித நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் அவசியம் எழுந்தமை, நாட்டின் தென் மேற்குப் பிரதேசத்தையும் ஏனைய பகுதிகளையும் கேந்திரப்படுத்தி மக்க ளைக் குடியேற்றும் தேவை எழுந்தமை ஆகிய காரணங்களுக்கான தீர்வுகளாக சிபாரிசுகளைச் செயற்படுத்தும் முகமாக 1927 ஆம் ஆண்டு இலங்கையில் முதல் தடவையாக காணிகள் தொடர்பான ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவினது சிபாரிசுகளுக்கு இணங்க 1931 ஆம் ஆண்டில் காணி ஆணையாளரின் திணைக்களம் தாபிக் கப்பட்டது. தற்போது காணி ஆணை யாளரின் திணைக்களம் காணி ஆணை யாளர் நாயகத்தின் திணைக்களம் என உயர்வு பெற்றுள்ளது..

அரசாங்கத்தின் வசமிருந்த சகல காணிகளினதும் அதிகாரத்தத்துவங்கள் இந்தத் திணைக்களத்திற்கு உரித்த ளிக்கப்பட்டன. பெரும்குடி விவசாயிகள் குடியேற்றம், மேட்டு நிலங்கள் தொடர் பான கருத்திட்டங்கள், கிராமங்களை விஸ்தரிக்கும் கருத்திட்டங்கள், இளை ஞர் தொடர்பான கருத்திட்டங்கள், நடுத் தர வகுப்பினர் தொடர்பான கருத்திட் டங்கள், நடுத்தர வகுப்பு வர்த்தகர்கள் தொடர்பான கருத்திட்டங்கள் என்ற விஷேட நிகழ்ச்சித் திட்டங்களை இனம் கண்டறிதல், காணிகளைப் பெற உரித் துடையவர்களைத் தேர்ந்தெடுத்து (காணி கள் தொடர்பான பகிரங்கக் கூட்டங்களை நடத்தி) காணிகளைப் பகிர்ந்தளித்தல் என்பன காணி ஆணையாளர் நாயக த்தின் திணைக்களத்திற்கு ஒப்படைக் கப்பட்ட பிரதான பணிகளாகும்.

**"காணிக் கச்சேரி" எனக் கருதப்படுவது அரச காணியை மக்களுக்கு வழங்குவதற் காக நடைமுறைப்படுத்தப்ப டும் கூட்டம். அதாவது காணிகள் தொடர்பான பகிர ங்கக் கூட்டங்களை நட த்தி காணிகளைப் பகிர்ந்த ளித்தல் ஆகும்.**

அரசாங்கத்திற்கு உரித்தான காணி களையும் தனியாருக்கு உரித்தான காணிகளையும் தனித்தனியாக இனம் கண்டு ஒதுக்கும் பொருட்டு 1931 ஆம் ஆண்டில் காணிகள் நிர்ணயக் கட்ட ளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1935 ஆம் ஆண்டு காணிகள் அபிவி ருத்திக் கட்டளைச் சட்டம் சட்டமாக்கப் பட்டது. அந்தச் சட்டத்திற்கு இணங்க அரசாங்கத்தின் வசமிருந்த சகல காணி களினதும் பொறுப்பு, அந்தக் காணி களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவ ற்றை அபிவிருத்தி செய்தல் போன்ற அனைத்து அதிகாரத் தத்துவங்களும் இந்தத் திணைக்களத்திற்கு உரித்தளிக் கப்பட்டன.

பல திணைக்களங்களுக்கும், பல நிறுவனங்களுக்கும் இன்னும் நபர்களு க்கும் வர்த்தக மற்றும் வதிவிட நோக் கங்களுக்காக காணிகளைப் பகிர்ந் தளித்தல், பலதரப்பட்ட ஒதுக்கங்களை இனம்காணுதல், கடற்கரைப் பகுதியை நிர்வகித்தல், பொது ஏரிகளை பரிபா லித்தல் ஆகிய நிர்வாக நடவடிக்கை களை இலகுபடுத்தும் முகமாக 1947 ஆம் ஆண்டில் அரச காணிகள் கட்ட ளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தச் சட்டத்தினால் காணி ஆணை யாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு அத்தகைய அதிகாரத் தத்துவங்கள் உரித்தளிக்கப்பட்டன.

1972 இன் 01 ஆம் இலக்கக் காணி கள் சீர்திருத்தல் ஆணைக்குழுச் சட் டத்திற்கு இணங்க காணிகள் சீர்தி ருத்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இங்கு 50 ஏக்கர்களுக்கு அதிகமான சகல காணிகளினதும் உரித்துக்கள் இந்த ஆணைக்குழுவுக்கு மாற்றிக் கையளிக்கப்பட்டன. 1979 ஆம் ஆண் டில் அறிமுகப்படுத்தப்பட்ட உறுதிப் பத்திரங்கள் தொடர்பான விஷேட ஏற் பாடுகள் சட்டத்திற்கு இணங்க காணிகள் சீர்திருத்தல் ஆணைக்குழுவுக்கு மாற் றிப் பெறப்பட்ட காணிகளை மீண்டும் அர சாங்கத்திற்கு மாற்றிப் பெற்றுக்கொண்டு பொது மக்களுக்கு அந்தக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் கருமமும் காணி ஆணை யாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

**➢மாகாணங்களுக்கு இடை யிலான நீர்ப்பாசனக் காணி கள் அபிவிருத்திக் கருத்திட் டங்களை முகாமை செய் தல்,**

**➢காணிகள் அபிவிருத் திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி பகிர்ந்தளித்தல், பகிர்ந்தளிக்கப்பட்ட காணி களுக்கு உறுதிப்பத்திரங் க்ளை வழங்குதல்.**

**➢அரச காணிகள் கட்ட ளைச் சட்டத்தின் கீழ் வீடமை ப்பு, விவசாய, கைத்தொழில் மற்றும் வர்த்தக நோக்கங் களுக்காக நீண்டகால உறு திப்பத்திரங்களின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித் தல்.**

**➢ விஷேட மற்றும் சுயா தீன உறுதிப்பத்திரங்களை வழங்குதல், விகாரைகளுக் கான பூஜா உறுதிகளை வழங்குதல்.**

**➢அரசாங்கத் திணைக் களங்கள், நியதிச்சட்ட சபை கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றுக்குத் தேவையான காணிகளை விடுவித்தல்.**

**➢குத்தகைக்கு காணிகளை வழங்குதல்.**

**➢காணிகள் வழங்கல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத் தின் கீழ் காணிகளைப் பகிர் ந்து அளித்தலும் உறுதிப் பத்திரங்களை வழங்குத லும்.**


**➢அரச காணி (உடைமை மீளப்பெறல்) சட்டத்தின் கீழ் அரச காணிகளையும் ஒது க்கங்களையும் பாதுகாத் தல்.**

**போன்றவை காணி ஆணை யாளர் நாயகத்தின் திணைக் களத்தின் செயற்பாடுகளா கும்.**

(தொடரும்...)




# புது பள்ளிக்கூடம்...



என்னுடைய அம்மாவுக்கு வேறு ஊரில் நல்ல வேலை கிடைத்ததால், நாங்கள் அந்த ஊருக்குச் சென்றோம். நானும் புதிதாக ஒரு பள்ளியில் சேர நேரிட்டது.

"பள்ளிக்கூடம் புதுசா, ஜாலியா இருக்கும்... உனக்கு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள்" என்றார் அம்மா!

பள்ளிக்குள் நுழைந்தேன். எல்லோரும்என்னை முறைத்து முறைத்து பார்த்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு நண்பனுடன் வலம் வந்தார்கள். எனக்கு மட்டும் அங்கு நண்பர் யாருமில்லை!

அழகிய வெட்டுக்கிளி படம் போட்ட புதிய சட்டை அணிந்திருந்தேன். அதைக் கூட யாரும் கவனிக்கவில்லை. எல்லோரும்என்னை மார்த்தா என்று அழைத்தார்கள். எனக்கு எரிச்சலாக வந்தது. உண்மையில் என் பெயர் "மார்சியா!" அதைக்கூடச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை.

மதியம் சாப்பாட்டு வேளை! எல்லோருக்கும் சாப்பாட்டு அறைக்கு வழி தெரிந்திருந்தது. எனக்கு மட்டும் தெரியவில்லை! எல்லோரும் ஆசிரியர் போட்ட கணக்கை சரியாகச் செய்தார்கள். என்னால் மட்டும் முடியவில்லை. மீண்டும் எரிச்சல் வந்தது!

இரவு படுக்கப்போகும் போது அம்மாவிடம் சொன்னேன், "இந்தப் பள்ளிக்கூடம் எனக்குப் பிடிக்கவில்லை".

"எல்லாம் சரியாகிவிடும்" என்றார் அம்மா. அடுத்த நாள் பள்ளிக்கூடப் பேருந்தில் ஏறினேன். இரண்டு இரண்டு பேராக அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். என் அருகில் மட்டும் யாரும் உட்காரவில்லை.

மதியம் சாப்பாட்டு வேளை ஜோடி ஜோடியாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். நான் மட்டும் தனியே சாப்பிட்டேன். இன்றும் அதே எரிச்சல்...

"இன்றைக்கும் சரியில்லை!" இரவில் படுக்கப் போகுமுன் அம்மாவிடம் சொன்னேன். "சரியாகிவிடும்..!"அம்மாவின் பழைய பல்லவி. அடுத்தநாள்- "உடம்பு சரியில்லை... நான் பள்ளிக்குப் போகவில்லை!" என்று அம்மாவிடம் கூறிப்பார்த்தேன்.

"அதெல்லாம்முடியாது... பள்ளிக்குப் போ" அம்மா வலுக்கட்டாயமாக என்னைப் பள்ளிக்கு அனுப்பினார். பள்ளி சென்றேன்.

அன்று ஓவிய வகுப்பு! சிலர் வரைந்த படங்களை ஆசிரியர் எல்லோருக்கும் தெரியும்படி கைகளில் தூக்கிக் காண்பித்தார். எனது ஓவியத்தை மட்டும் காட்டவில்லை. மாலையில், கால்பந்து விளையாடினோம். நான் 2 கோல்கள் போட்டேன்! எல்லோருக்கும் ஆச்சரியம்!

அன்று இரவு அம்மா கேட்டார், "இன்று எப்படி இருந்தது பள்ளிக்கூடம்?"

"இன்னும் ஒருநாள் பார்ப்போம்!" என்றேன். "உங்கள் டீச்சரிடம் நான் வேண்டுமானால் பேசட்டுமா?"

"அதெல்லாம் வேண்டாம்மா..!" அடுத்த நாள் கிராஃப்ட் வகுப்பு நடந்தது. நான் காகிதத்தில் அழகிய விமானம் ஒன்று செய்தேன். டீச்சர் அதை வாங்கி எல் லோருக்கும் தெரியும்படி தூக்கிக் காட்டினார் (நான் செய்த விமானத்தை மட்டுமே). எல்லோரும் என்னை வியப்புடன் பார்த்தார்கள். எனக்குப்பெருமையாக இருந்தது.

அதுவரை என்னிடம் பேசாமலிருந்த கேத்தரீன், என்னருகே வந்து, "உன் சட்டையிலுள்ள வெட்டுக்கிளி கொள்ளை அழகு" என்றபடியே அதைத் தொட்டுத் தடவிப் பார்த்தாள்.

டயானா என்ற பெண், "என் பக்கத்தில் வந்து உட் காரேன்' என்றபடியே நகர்ந்து இடம் கொடுத்தாள். அன்று இரவு அம்மா கேட்டார், "என்ன வேறு நல்ல பள்ளிக்கூடத்தில் உன்னைச் சேர்த்து விடட்டுமா?"

"ஏன்? இந்தப் பள்ளிக்கூடத்துக்கு என்ன? எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! இங்கேதான் நான் படிப்பேன்" திறமையை வளர்த்துக் கொண்டால் எல்லோர் மனதிலும் இடம் பிடிக்கலாம் என்பதை புரிந்து கொண்டாள்.

## உலகின் மிகச்சிறந்த 10 சிறுவர் பொழுதுபோக்குகள்

### யோகா



தற்காலத்தில் யோகா என்பது ஒரு பொழுதுபோக்கு மட்டும் இன்றி அன்றாட வாழ்வில் வயது வேறுபாடின்றி ஒரு முக்கிய செயலாகவே மாற்றி வருகின்றது. கட்டாயமாக இவை செய்யப்பட வேண்டும் என வைத்தியர்கள் அறிவுரையும் சிலருக்கு உண்டு. இவற்றை சிறுவயதினிலே பொழுதுபோக்கான பழக்கமாக்கிக்கொள்வது சாலச் சிறந்தது. யோகா மூலம் சிறார்கள் சிறுவயதிலிருந்தே தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மனோபலம், உடல்பலம், தெளிவான சிந்தனை என்பன வளர ஆரம்பிக்கும்.

---



### வீட்டுத்தோட்டம்

சிறுவர்களுக்கான பொழுதுபோக்குகளில் மிகவும் சிறந்த ஒன்றாக உலகளாவிய ரீதியில் வீட்டுத்தோட்டம் அமைத்தலும் கொள்ளப்படுகின்றது. அவர்கள் எப்பவும் தங்கள் கைகளில் அழுக்கு பெற விரும்புவார்கள். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் போது அவர்கள் விருப்பதுடன் கூடிய ஒன்றாகவும் விளங்குவதோடு வண்ணமயமான பூக்கள், மரக்கறிகள், பழங்கள்,மரங்கள், செடிகள்,கொடிகள், பட்டாம்பூச்சிகள் அவர்களின் மனதை மேன்மையானதாக மாற்றுவதோடு குழுச் செயற்பாடுகளிலும் சிறந்த ஆளுமைகொண்டவர்களாக உருவாக்கும். மருந்துக் கலவை அற்ற பயனுள்ள உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம் .

## பொது அறிவு

• எது உலகின் நீண்டநேர நாடகம்?

**ஹேம்லட் (Hamlet) 4042 வரிகளும் மற்றும் 29551 சொற்களையும் கொண்டுள்ளது**

• எந்த பண்டைய காவியம் மணலால் எழுதப்பட்டது?

**பாபிலோன் நாகரிகத்தின் கில்கமெஷ் (Gilgamesh)**

• எந்த பாண்டிய மன்னர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை கட்டத் தொடங்கினார்?

**குலசேகர பாண்டியன்**

• மிசா (MISA) மற்றும்பொடா (POTA) என்றால் என்ன?

**உள்நாட்டுப் பாதுகாப்பு பராமரிப்புச் சட்டம் - (மிசா) பயங்கரவாதச் செயல்களைத் தடை செய்யும் சட்டம் (பொடா) (பிரவன்சன் ஆப் டெர்ரிஸ்ட் ஆக்டிவிட்டிஸ் ஆக்ட் (பொடா)**

• யாரால் மிதிவண்டி(சைக்கிள்)கண்டுபிடிக்கப்பட்டது?

**பேட்ரிக் ,மேக்-மில்லன்**

• எந்த ஆசிய சுற்றுலாத்தளத்தில் அதிக இந்து மதம் சிற்பங்கள் உள்ளன?

**இந்தோனேஷியாவில் உள்ள பாலியில்**

• சிங்கப்பூர் பண்டைய காலப்பெயர் என்ன?

**துமாசிக் இது உள்ள கடல் நகரம் என்று பொருள்படும்**

பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி என்றமூன்றும் உள்ளவர் எதையும் சாதிக்கலாம்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜனாதிபதி உரைத்த யதார்த்தமான கருத்து

மனித உரிமைகள் என்ற விவகாரங்கள் ஆசிரியர்களின் பணியில் தலையிடுவதால், ஒழுக்கமான மாணவர் சமூகத்தை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து யதார்த்தமானது என்பது மறுக்கமுடியாதது.

உண்மையில் இன்றைய சமகால மாணவர்களின் ஒழுக்கம் என்ற விடயம் சவால் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

இதற்கு மூலகாரணம் மாணவர்களை நல்வழிப்படுத்துகின்ற பணியில் ஆசிரியர்கள் தலையிடாமையாகும்.

அதாவது மனித உரிமை மற்றும் சிறுவர் உரிமைசார் விடயங்கள் ஆசிரியர்களின் பணிகளில் அதிகமாகத் தலையிடுகிறது.

இதனால் படிப்பித்தல் என்ற விடயத்தோடு தங்கள் பணியை ஆசிரியர்கள் முடித்து விடுகின்றனர்.

ஒழுங்குமுறைகளை மீறிய மாணவர்களைத் தண்டித்தல் என்பது மிகப் பெரிய தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

இதனால் ஓர் ஆசிரியர் ஒரு மாணவனைத் தண்டித்தால், அந்த ஆசிரியர் கைது செய்யப்படுகின்ற அளவுக்கு நிலைமை போய்விடும்.

உண்மையில் ஆசிரியர் தொழில் என்பது படிப்பித்தலுடன் மட்டும் நிற்பதில்லை.

மாறாக மாணவர்களை வழிப்படுத்துவது, நல்லொழுக்கமுள்ள மாணவர்களாக அவர்களை ஆக்குவது என்பன ஆசிரியர்களின் கடமையாகும்.

இதனாலேயே ஒரு காலத்தில், மாணவர்களை ஆசிரியர்கள் அடித்துப் படிப்பித்தனர்.

அடித்துப் படிப்பித்த ஆசிரியர்களை எந்த மாணவனும் ஒருபோதும் மறக்க மாட்டான். அத்தகைய ஆசிரியர்கள் மீது அன்பும் மரியாதையும் மிகுந்திருக்கும்.

ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. மாணவன் எந்தக் குழப்பமும் செய்யலாம். அவன் செய்வது பாடசாலைக்கும் ஏனைய மாணவர்களுக்கும் அதிபர் ஆசிரியர்களுக்கும் பாதகமாக அமைந்தாலும் அது குறித்து நடவடிக்கைகள் எடுப்பது மாணவனின் மனித உரிமையை மீறுவதாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில்தான் மாணவர்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்ற முடிவுக்கு ஆசிரியர்கள் வந்துவிடுகின்றனர்.

ஆக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூறியதுபோல, ஆசிரியர் பணியில் மனித உரிமை விவகாரங்கள் தலையிடுவதால் நல்லொழுக்கமிக்க மாணவர் சமூகத்தை உருவாக்க முடியாமல் போகிறது என்ற கருத்து நூறு வீதம் ஏற்புடையது.

எனவே எங்கள் வாழ்வியல், எங்கள் பண்பாடு, எங்கள் பிள்ளைகளின் ஒழுக்கம் என்ற விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக மனித உரிமை விடயங்கள் கட்டமைக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் மாணவர்களுக்கான நியாயபூர்வமான தண்டனை என்றவரையறைக்குட்பட்டவை என்பதையும் கவனத்தில் கொள்வது கட்டாயமானதாகும்.

# சர்வதேச மேற்பார்வை நீக்கப்படுமாயின் இலங்கை அரசு தப்பித்துவிடும் – யோகேஸ்

சர்வதேச மேற்பார்வை நீக்கப்படுமானால் இலங்கை அரசாங்கம் போர்க்குற்றச் சாட்டிலிருந்து தப்பித்து விடும் என தமிழ்த்தேசிய கூட்டமைப பின் மட்டக்களப்புமாவட்டபாராளுமன்ற உறுப்பினர்சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் மனித உரிமை கூட்டத் தொடர் குறித்து கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மனித உரிமை ஆணையகம் தொடர்ச்சியாக இலங்கை மீது கரிசனை காட்ட வேண்டும் என்பதில் மிக வும கவனமாக இருக்கின்றோம்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் ஆதரவளிக்காத நிலைமையையே காண்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசைப் பாதுகாக்கும் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுப்பது வேடிக்கை

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐ.நா.பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்கனவே தேவையான கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் அரசுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதற்கு துணைபோவதுடன், இலங்கை அரசின் நீதி மறுப்புக்கு நியாயம் கற்பித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்,

மறுபக்கமாக ஐ.நா.தீர்மானத்தையும் பரிந்துரைகளையும் செயற்படுத்த இலங்கை அரசு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் அதில் முன்னேற்றங்கள் எதுவும் காணப்படவில்லை என்று ஐ.நா ஆணையாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கையை வரவேற்றும், இலங்கை அரசுக்கு இது இறுதிச் சந்தர்ப்பம் என்றும், ஐ.நா பரந்துரைகளை நிறைவேறறத் தவறினால் அரசு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்திருப்பது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற செயற்பாடாகும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று அணுகுவதற்கும், தீராப்பிரச்சினைகளாக இவை இருப்பதற்கான நோக்கத்தோடு அணுகுவதற்கும்வேறுபாடுகள் இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீராப் பிரச்சினைகளாக இருந்தாலே, அதைத் தீர்த்துத் தருவதாக வாக்குறுதிகள் வழங்கி தேர்தல்களில் வாக்குகளை அபகரிக்கலாம் என்று கருதுவதாலேயே ஒருபக்கம் அரசுக்கு முண்டுகொடுத்துக கொண்டு, மறுபக்கமாக அரசுக்கு எச்சரிக்கை விடுப்பது போல் காட்டிக்கொள்கின்றனர்.

அரசுக்கு முண்டுகொடுப்பதற்கான முழுமையான சலுகைகளை அனுபவித்து வரும் இரா.சம்பந்தனும் ஏனைய கூட்டமைப்பினரும என்னதான் எச்சரிக்கையான அறிக்கைகளை வெளியிட்டாலும் அவர்கள் ஒருபோதும் அரசுக்கு எதிராக செயற்படப் போவதில்லை என்ற உறுதியான நம்பிக்கையிலே இலங்கை அரசு தமிழர் விடயத்தை மெத்தனப்போக்கோடு அணுகி வருகின்றது என்றும் டக்ளஸ் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ-7)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இவ்வருடம் மார்ச் மாதம் 16ம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஆலய பங்குத்தந்தை, மாவட்டச் செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை கடற்படையினரின் பங்களிப்புடன் இத்திருவிழாவினை சிறப்பாக நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வருடம் இலங்கையின் பல பிரதேசங்களில்இருநதும் மற்றும் இந்தியாவில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 16ஆம் திகதி கச்சதீவில் நடைபெறும் திருவிழாவில் பங்குபற்றச் செல்லும் யாத்திரிகர்கள் திருவிழாவுக்கு முதல் நாள் 15ஆம் திகதி காலை கச்சதீவு சென்று இரவு தங்கியிருந்து மறுநாள் விசேட திருப்பலியில் கலந்து கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது. யாத்திரிகர்களுக்கான பஸ் போக்குவரத்து வசதி யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான்வரை 15ஆம்திகதி அதிகாலை 3.30 மணியிலிருந்து செயற்படுத்தப்படும். படகு போக்குவரத்து வசதி குறிகாட்டுவானிலிருந்து அதிகாலை 4.30 மணியி லிருந்து பகல் 10.30 மணி வரை செயற்படுத்தப்படும். யாத்திரிகர்களுக்கான ஒரு வழிப் படகுக் கட்டணமாக குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கு ரூபாய் 325/-உம் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு ரூபாய் 225/- உம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களுக்கான உணவு வசதி இலங்கை கடற்படையினரால்மேற்கொளளப்படுகின்றது. மேலும் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் மற்றும் தனியார் கடைகள் ஆகியன இயங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வங்கி, சுற்றுலா நீதிமன்று, சுங்க நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.

யாத்திரிகர்கள் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை கொண்டு வருவதனை தவிர்க்குமாறு கேட்டுக் கொளளப்படுகின்றனர். மதுசாரம், புகையிலைப் பொருட்களுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலம்

(வெல்லாவெளி )

மட்டக்களப்பு - வெல்லாவெளி - றாணமடு மலையார்கட்டு வயல் பிரதேசத்தில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய விவசாயி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இவர்கொலைசெயயப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (7)

# சட்டங்களை மீறியவர்களுக்கு எதிராக ரூ. 5 இலட்சத்து 85 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் சட்டங்களை மீறிய யாழ் வர்த்தகர்களுக்குகெதிராக 5 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம அறவிடப்பட்டதாக வடமாகாணப்பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாணப் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்தார். கடந்த பெப்ரவரி மாதம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்கள் பாவனையாளர் சட்டங்களை உரிய முறையில் பின்பற்றாத யாழ் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் மல்லாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில வெற்றிலைக் கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான், பெரிய கரைசல் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# ஆன்மீகச் சிந்தனைகள்

## குளிர் அறையில் கொதிப்பு

✦ பிறரை ஏமாற்றிப் பிழைப்பது கூடாது. யாசகம் வாங்கி சோம்பேறியாக வாழ்வதும் கூடாது. பிறர் பொருளில் நெய்யும் பாலும் உண்பதைக் காட்டிலும் தன் உழைப்பினால் தண்ணீரும் சோறும் உண்பதே சிறப்பானதாகும். மூன்று பொருள்களை மிச்சமாக வைக்கக் கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நெருப்பு, கடன், பகை என்று குறிப்பிடுகின்றன. நெருப்பு மிச்சமிருந்தால் அந்த இடத்தையே பொசுக்கி விடும். கடன் மிச்சமிருந்தால் வளர்ந்து சுமையாகி விடும். பகைவன் மிச்சமிருந்தால் சமயம் பார்த்து நம்மை அழித்து விடுவான். எந்த நேரம் இறைவனுடைய திருநாமம் நினைக்கப் பட்டதோ அந்த நேரம் எல்லாம் நம்முடைய நேரமாகும். எந்த பணம் தர்மத்திற்காக செலவழிக்கப்பட்டதோ அது நம்முடைய பணமாகும். இவ்விரண்டும் எப்போதும் உதவ நமக்காக காத்துக் கொண்டிருக்கும். மகிழ்ச்சி என்பது செல்வச் செழிப்பிலோ அல்லது பெரியமாட மாளிகையிலோ கிடைப்பதில்லை. ஏர்கண்டிஷன் அறையில் இருக்கும் ஒருவன் மனக்கொதிப் புடன் இருக்கக்கூடும். ஆனால், உச்சி வெயிலில் விறகினைப் பிளப்பவனின் மனம் மகிழ்ச்சியோடு இருக்கும். மகிழ்ச்சி என்பது மனநிலையைப் பொறுத்ததே தவிர பணத்தைப் பொறுத்தது அல்ல.

# விறுவிறுப்பானது மைதானம்; இறுதியில் நவிண்டில் கலைமதி

**கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கிடையிலான உடைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. அசத்தலான அரையிறுதிப் போட்டியில் இமையாணன் மத்தி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது நவிண்டில் கலைமதி அணி.**

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து இமையாணன் மத்தி அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

15 ஆவது நிமிடத்தில் நவிண்டில் கலைமதி அணி முன்கள வீரர் விஜிதரன் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக்கட்டத்தை எட்டியது.

இதனால் நவிண்டில் கலைமதி அணி இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.



இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் தொடர்ந்து பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் இரு அணிக்கும் பெரும் சவாலாக அமைந்தது.

இந்நிலையில் 40 ஆவது நிமிடத்தில் நவிண்டில் கலைமதி அணி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த இமையாணன் மத்தி அணிக்கு தண்ட உதை கிடைத் தது.

இதனை அவர்கள் சிறப்பாக பயன்படுத்திக் கோலாக்க ஆட்டம் மேலும் உச்சக் கட்டத்தை எட்டியது.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளாலும் மேலதிக கோல்களை போட முடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப் பட்டது. இதில் நவிண்டில் கலைமதி அணி 4:2 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (க-60)

## சம்பியனாகியது நக்கீரன் அணி

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளிற்கிடையில் 2019 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவின் பெண்களுக்கான கூடைப் பந்தாட்ட போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமானது.

இறுதி ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் நக்கீரன் விளையாட்டுக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## யாழ்.வலய கரப்பந்தாட்டத் தொடர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி சம்பியன்



18 வயதுப்பிரிவு சம்பியன்



16 வயதுப்பிரிவு 2 ஆம் இடம்

யாழ்.வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப்போட்டி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

18 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் முதலாம் இடத்தையும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றது.

அத்துடன் 16 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கோப்பாய் மகா வித்தியாலயமும் இரண் டாம் இடத்தை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் பெற்றது.

20வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரி கோப்பாய் மகா வித்தியாலய அணிகளும் பெற்றுக்கொண்டன. (க-10)

## டயமனை வீழ்த்தி வென்றது வல்வை



கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலைய வைரவிழாவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களிற்கிடையில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் அண்மையில் இடம் பெற்ற லீக் சுற்று ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணியானது மோதியது. பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை அணியானது 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. பெறப்பட்ட இருகோல்களையும் வல்வை அணியைச்சேர்ந்த பிரசாந் பெற்றுக்கொடுத்தார். ஆட்டநாயகனாக வல்வை அணியைச் சேர்ந்த சி. தர்சன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## ஜெனிவாவில் இல...

அரசுக்கு ஒத்துழைப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வு நேற்று மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் ஆரம்பமாகியது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் பொது வாக்கெடுப்பு ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து பிரேரணை நேற்று கொண்டுவரப்பட்டது.

அந்தப் பிரேரணை நேற்றைய கூட்டத்தில் இணைக்கவில்லை. இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தப் பிரேரணையை தற்போதைய நிகழ்ச்சி நிரலில் இணைக்க வேண்டும் என்று மாநகர பிரதி முதல்வர் துரைராசா ஈசன், மாநகர முதல்வரிடம் சபையில் வேண்டுகோள்விடுத்தார்.

சபையின் தேவை கருதியும், மக்களின் தேவை கருதியும் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியுமென உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இந்தக் காலகட்டத்தில் பிரதி முதல்வரினால் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணை அவசியமானதென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

அத்துடன், இந்தப் பிரேரணையின் முக்கியத்துவம் சார்ந்து இந்தப் பிரேரணைக்கு வலுச்சேர்க்க தாம் விரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, குறுக்கிட்ட முதல்வர், இந்தப் பிரேரணை சபையில் எடுப்பதில்லை என உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்ட ஒரு விடயம். அதற்கமைவாக இந்தப் பிரேரணையை சபையில் எடுக்கவில்லை. அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்ட போது, பிரேரணை சமர்ப்பித்த பிரதி முதல்வரும் உடனிருந்தார் என்றார்.

ஏனைய உறுப்பினர்கள் இந்தப் பிரேரணையை சபையில் விவாதிக்க வேண்டாமென கூறினால், அந்தப் பிரேரணையை சபையில் எடுக்கமாட்டீர்களா? என பிரதி முதல்வர் ஈசன், முதல்வரைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

இது தனிப்பட்ட பிரேரணை அல்ல. ஒரு பொதுவான பிரேரணை என்பதன் அடிப்படையில், எமது கட்சி அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் கூடி இந்தப் பிரேரணையைக் கொண்டு வருவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தினால், இந்தப் பிரேரணையை எடுக்குமாறு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை. ஆகையினால், இந்த விடயம் தெரிந்த நீங்களும், இந்த சபையில் எடுத்து சர்ச்சைக்குரிய விடயம் ஆக்க வேண்டாமென முதல்வர் சபையில் தெரிவித்தார்.

இதன்போது, 45 உறுப்பினர்களையும் இணைத்து செயற்பட விரும்பினால், நாங்கள் உங்களுடன் இணைந்து செயலாற்ற முடியும் என உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இவ்வாறு உறுப்பினர்கள் பலர் தமது கருத்துக்களை முன்வைத்த போதிலும், முதல்வர் தனது கொள்கையில் இருந்து மாறவில்லை. இந்தப் பிரேரணை எடுக்காத காரணத்தினால் சபையில் உறுப்பினர்கள் இடையே கருத்து மோதல்களும் இடம்பெற்றன.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டுமெனவும் தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமெனவும், அழுத்தம் திருத்தமாக சொல்ல வேண்டிய இடங்களிற்கு சொல்லியிருக்கின்றோம். பிரதி முதல்வர் நீங்கள் உங்களுடைய பதவிக்கு ஏற்ப செயற்படவில்லை என்று கடுமையான விமர்சனைங்களை முன்வைத்த முதல்வர் ஆர்னோல்ட், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி எதுவென்றும் கேள்வி எழுப்பினார்.

இதன்போது, ரெலோ கட்சி சார்ந்த பிரதி முதல்வருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகர உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள் எந்த துயரங்களையும் படவில்லை. பட்டால்தான் அந்த வேதனை புரியுமென பிரதி முதல்வர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இவ்வாறு வாக்குவாதங்கள் வலுப்பெற்ற நிலையில், ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடரில் வலுச்சேர்க்கும் முகமாக யாழ். மாநகர சபையில் இருந்து கால அவகாசம் கொடுப்பதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென உறுப்பினர்கள் கோரினர்.

கால அவகாசம் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். அது எமது நிலைப்பாடு அல்ல என முதல்வர் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

குறுக்கிட்ட பிரதி முதல்வர், நீங்கள் அரசை ஆதரிக்கின்றீர்களா? என முதல்வரிடம் கேள்வியெழுப்பினார்.

புதிலளித்த முதல்வர், இந்த சபையில், உரக்கப்பேசி, உணர்வாளர் என காட்டி அனைத்தையும் சாதிக்க முடியுமென நினைக்க வேண்டாம். எமக்கும் எல்லாம் தெரியும். அனைத்து விடயங்களும் தெரிந்த பின்னரும் சபையில் அநாகரீகமாக நடந்துகொள்வதாக சபையில் அதிருப்தி வெளியிட்டார்.

இது என்னோடு உரிமை மீறல், தற்போது எனது பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் இணைக்குமாறு பிரதி முதல்வர், முதல்வரிடம் கோரினார். உறுப்பினர்கள் வாக்கெடுப்பிற்கு எடுக்குமாறு கோரியிருந்தனர். அதனை ஏற்க மறுத்த முதல்வர் வாக்கெடுப்பு நடத்த முடியாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதனால் பிரேரணை தொடர்பாக எந்த வித தீர்மானங்களும் எடுக்கப்படாமல் சபையில் கூச்சல் குழப்பங்களுடன் சபை அமர்வு இடம்பெற்றது. (ம-3-101)

## ஐ.நாவில் கால...

வாராந்த கேள்வி பதில் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரேரணையை நடைமுறைப்படுத்த 4 வருடங்களாக அரசு முன்வரவில்லை. மாறாக நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று உயர் பதவிகளில் உள்ளோர் கூறியுள்ளார்கள்.

இலங்கை ஏதாவதொரு கடப்பாட்டை நடைமுறைப்படுத்த முன்வந்தால்தான் சர்வதேசக் கண்காணிப்பு இடம்பெறும். முன்வராவிட்டால் கால அவகாசம் வழங்குவதால் வரும் இலாபம் என்ன?

கொடூரமான கொலையாளிகளைத் தமது துணிச்சல் மிக்க வீரர்கள் என்று தொடர்ந்து கூறி வரும் இலங்கை அரசுகள் அடையாளப்படுத்தும் வரை எந்த ஒரு பிரேரணையின் நடைமுறைப்படுத்தலும் நடைபெறாது.

கால அவகாசம் கொடுத்தாலும் அது நடைபெறாது. சவேந்திர சில்வாவுக்கு அதியுயர் இராணுவ பதவி கொடுத்திருப்பதில் இருந்து இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு வருட காலக்கெடு 2017ஆம் ஆண்டு கொடுத்தபோது அடுத்த இரு வருடங்களில் எதுவும் நடைபெறாது என்று அமெரிக்க உயர் அதிகாரி நிசா பிஸ்வாலுக்கு கூறினேன்.

இல்லை! பிரேரணையை நடைமுறைப்படுத்தவே கால அவகாசம் கொடுக்கின்றோம் என்றார். நீங்கள் அவ்வாறு கூறிவிட்டு கால அவகாசம் கொடுத்துவிட்டுப் போய்விடுவீர்கள். இலங்கை அரசை நடைமுறைப்படுத்த வைக்க யார் வருவார்கள்? என்று கேட்டேன்.

நாங்கள் உங்களுடன்தான் எப்பொழுதும் இருப்போம் என்று தமிழர்களின் நலனைத் தாமும் நாடுவதாகக் கூறினார்.

இன்று என்ன நடந்துள்ளது? அமெரிக்கா எங்கே? அவர்கள் பின்னால் இருப்பதாகக் கூறினாலும் முன்னால் வரமுடியாமலேயே அவர்கள் பின்னால் இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கேற்பட்ட உயிர் அழிவை கொடூரத்தை வரவேற்றவர்கள் இலங்கை அரசினர். இன்றும் கொலையாளிகளைத் தூக்கி வைத்தே பேசுகின்றார்கள்.

அத்துடன் அன்றிருந்தவர்களிடையே பசிலைவிட கோத்தபாயாவுக்கே ஆதரவு இன்றும் அதிகம். அந்த விதத்தில் பெரும்பான்மை சிங்கள மக்களும் போர்க் குற்றங்களாவன குற்றங்கள் அல்ல. அவை எமது போர் வீரர்களின் துணிச்சல் மிக்க வீரமே என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்கள்.

ஆகவே, யார் பிரேரணையை நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள்? கால அவகாசம் எதை புதிதாக இயற்றித் தரப் போகின்றது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அதிகாரத்தால் அதன் வழிவந்த செல்வச் செழிப்பால் அரச அனுசரணைகளால் மயங்கி நிற்பவர்கள்.

கால அவகாசம் கொடுத்தால் தமக்கு அதுவரை நல்ல காலம் என்ற நோக்கில் கால அவகாசத்தை சிபார்சு செய்யலாம். தேர்தலில் நிற்காமலேயே அவர்கள் சிலருக்கு போனஸ் ஆசனங்கள் காத்திருப்பன. எம்மால் அது முடியாது. தமிழர்களை இனியும் ஏமாற்றிக்கொண்டிருக்க எம்மால் முடியாமல் இருக்கின்றது.

ஜெனிவாவில் ஒரு முகம் இலங்கையில் ஒரு முகம் காட்டுகின்றது இலங்கை அரசு. அத்துடன் தமக்குள்ளேயே வெவ்வேறு முகங்களையும் காட்டி வருகின்றனர்.

சுயநல காரணங்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு வக்காலத்து வாங்குகின்றது. முழுமையான உண்மையான விசாரணை இடம்பெற்று நீதி கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தினூடாகவே எமது மக்களுக்கு நியாயம் கிடைக்கும், நீதி கிடைக்கும். நடந்த கொடூரங்களைக் காலக்கெடு கொடுத்து மறைத்து விடவா ஐக்கிய நாடுகள் இருக்கின்றது? ஏற்கெனவே 10 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. கால அவகாசம் எதற்கு? என்றுள்ளது. (ம-3)

## அரசியல் தீர்வில்...

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதம் பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றிய போதே சம்பந்தன் மேற்குறித்தவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள போதும் பாதுகாப்பு செலவினங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுகிறது. அரசாங்கமும் எதிரணியினரும் ஒருவரையொருவர் சாடுகின்றனர். ஆனால், இரு தரப்பினர் மீதும் பிழையுண்டு.

இருதரப்பினரும் அரசியல் தீர்வை அடைவதில் வெற்றி பெற்றிருந்தால் யுத்தத்தை தவிர்த்திருக்கலாம். பிரபாகரனும் உருவாகியிருக்கமாட்டார் என்றார். (ம-3)

## கறுப்புப் பட்டியணி...

கில் ஆசிரியர்கள் கறுப்புப் பட்டியணிந்து அடையாளப் போராட்டத்தில் ஈடுபடுவதுடன், கறுப்புப் பட்டியுடன் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்-அதிபர் சேவையில் காணப்படுகின்ற சம்பள முரண்பாடு உள்ளிட்ட விடயங்களை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

வடக்கில் கடந்த மாதம் முழு அடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் கிழக்கில் வரும் 19ஆம் திகதி முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அதனால் வடக்கு - கிழக்கில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்காத வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இன்று காலை 8 மணி தொடக்கம் 8.30 மணிவரை அரை மணிநேரம் கறுப்புப் பட்டியணிந்து பாடசாலைகளுக்கு முன்பாகவுள்ள வீதியில் நின்று அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து கறுப்புப் பட்டியணிந்தவாறே கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

நாட்டின் பிரதான நகரங்களில் இன்றைய தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ம-3)

## அமைச்சரவை கூட்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சில அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தின் போது தொலைபேசி அழைப்புக்களை எடுப்பது மற்றும் அழைப்புக்களுக்குப் பதிலளிப்பது போன்ற காரணத்துக்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## வாகன பெர்மிட்...

இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## அபிவிருத்திக்கா...

ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் விரைவான அபிவிருத்திகளுக்கு இருக்கும் தடைகளை இல்லாமலாக்க கட்சி பேதமின்றி செயற்படவேண்டும்.

இல்லாவிட்டால் அபிவிருத்திக்காக செலவிடப்படும் தொகை போதாமல்போய் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்படும்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியம் என்ன தெரிவித்தாலும் எமது கொள்கையை நாங்கள் கடைப்பிடித்துக்கொண்டு செல்லவேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## புதிய ஆட்சி அமை...

துள்ளார்.

வரவு- செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு நடத்தும் இந்த நான்கு ஆண்டுகால அரசாங்கமே நாட்டினை நாசமாக்கியுள்ளது.

தேசிய உற்பத்திகளை வீழ்த்தி, சர்வதேச முதலீடுகளை தடுத்து ஆசியாவின் கீழ்மட்ட நாடாக இலங்கையை மாற்றியுள்ள நிலையில் இனியும் இந்த ஆட்சிக்கு இடமளிக்க முடியாது.

ஆகவே ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து புதிய ஆட்சிக்கு உதவுங்கள் என தெரிவித்துள்ளார். (ம-3)

## இளைஞன் சடல...

இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் குறித்த இளைஞனின் மரணம் தற்கொலையா? கொலையா? என பொலிஸார் சந்தேகித்து வருகின்றனர்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3-60)










CFC
CHENNAI FERTILITY CENTER

# சென்னை குழந்தை பேறின்மை சிகிச்சை மையம்



சென்னை, பாண்டிச்சேரி, ஆந்திரா
& பங்களாதேஷ் ஆகிய இடங்களில்
பல வருடங்களாக வெற்றிகரமாக
இயங்கி கொண்டு இதுவரை
23,000 திற்கும் மேற்பட்ட குழந்தையில்லா
தம்பதியர்களுக்கு அதிநவீன சிகிச்சையின்
மூலம் குழந்தைப்பேறு அளித்துள்ள
உலகப் புகழ் பெற்ற
Dr. VM.தாமஸ், Ph.D., FSAB.,
Embryology Tycoon & ICSI Maestro, Chennai Fertility Center - Chairman,
அவர்களின்

medicare JAFFNA

## யாழ்ப்பாணத்தில் இலவச மருத்துவ ஆலோசனை (Medical Expo)



Date : 15, 16 & 17 March 2019
Time : 10am to 7pm
Place : VEERASINGAM HALL, JAFFNA, SRILANKA
Stall No.: A32, A33, A34

Dr. VM. தாமஸ், Ph.D., FSAB.,
EmbryologyTycoon & ICSI Maestro,
Chennai Fertility Center - Chairman,

ஸ்ரீ லங்கா 071 927 6170
+91 98 41165197

WORLD RECORDS 23000+ IVF/ICSI BABIES SUCCESSFULLY DELIVERED WORLDWIDE (C-6760)

**சிகிச்சை முறைகள் :**

- குழந்தையில்லா தம்பதியரின் முழுமையான பரிசோதனைகளும், ஆலோசனைகளும்.
- IUI / IVF / ICSI / IMSI சிகிச்சைகள்.
- TESA / TESE / MESA / PESA சிகிச்சைகள்.
- சினைப்பையில் உள்ள நீர்கட்டிகளை அகற்றுதல்.
- கருக்குழாய் அடைப்புகளை கண்டறிதல்.
- எண்டோ மெட்ரியோசிஸ் பிரச்சனையை சரி செய்தல்.
- கருப்பையில் உள்ள கட்டி & குறுக்குச் சுவர் (Septum)அகற்றி சரி செய்தல்.
- 4-D ஸ்கேன் மூலம் கருப்பை, சினைப்பைகளின் தோற்றம், செயற்பாடு, இரத்த ஓட்டம் அறிதல்.
- உயிரணுக்கள் பரிசோதனை.
- விந்துக்குழாயில் அடைப்பு நீக்கும் அறுவை சிகிச்சை, விந்தணு சுத்திகரிப்பு (Sperm Process).
- ஹார்மோன் குறைபாடுகளை கண்டறிதல் அதற்கான சிகிச்சை முறைகள்.

முகாமில் கலந்து கொள்பவர்களுக்கு மட்டும் IVF / ICSI சிகிச்சைகளுக்கு சிறப்பு கட்டணச் சலுகை அளிக்கப்படும்

குழந்தை செல்வத்தை பெற இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்...

தலைமை மருத்துவமனை (தமிழ்நாடு)

## CHENNAI FERTILITY CENTER

New No. 79 / Old No. 129, Nelson Manickam Road, Aminjikarai; Chennai - 600 029
+91 90252 50000, +91 44 64582299
Website : www.chennaifertilitycenter.com, Email : chennifertilitycenter@yahoo.com / thomasivf@gmail.com



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



(C-6736)

UK - 550 /=Kg.
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELs

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-5752)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை


## பெற்றோல், டீசல்...

அறிவித்துள்ளது.

இதன்படி பெற்றோலின் விலை 3 ரூபாயாலும் டீசலின் விலை ஒரு ரூபாயாலும் அதிகரிக்கப்படுவதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புதிய விலைமாற்றத்தின் அடிப்படையில 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 132 ரூபாயாகவும் 95 ஒக்ரைன் பெற்றோலின விலை 159 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகிறது.

டீசலின் விலை 104 ரூபாயாகவும் சுப்பர் டீசலின் விலை 134 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சால் மாதாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைவாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

விலைச்சூத்திரம் நேற்றுமுன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தப்படும என நிதி அமைச்சுக் குறிப்பிட்டிருந்த போதும் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம்வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்று நிறைவேற்றப்பட்ட பினனரே நள்ளிரவு முதல் எரிபொருள் களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## வீடு வாடகைக்கு

யாழ்.நகர் கொழும்புத்துறை வீதியில் கணக்கர் சந்திக்கு அருகாமையில் உள்ள 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு (முன்பு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் இயங்கியது.)

தொடர்பு : 021 222 2478, 077 953 0496 (7958)



## வேலைவாய்ப்பு

இலங்கையில் பல மாவட்டங்களில் வியாபித்துள்ள எங்களது நிறுவனத்தில் உங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பு.

- உங்களது திறமைக்கு மட்டும் முதலிடம்
- உங்களது விடாமுயற்சி பயிற்சியுடன் பதவி உயர்வு
- குறுகிய காலத்தில் கூடிய சம்பளத்தினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு (45,000), உங்களுக்கென்று ஒரு புதிய வாகனம் ஒன்றினை பெறும் வாய்ப்பினை கூடிய விரைவில் பெறலாம்.
- வாழ்க்கையில் ஒரு தடவை மட்டும் கிடைக்கும் இந்த வாய்ப்பினை நழுவ விட்டு விடாதீர்கள். தொடர்புகளுக்கு : 077 552 8534

(7735)



## தொழிற் பயிற்சிகள்

MOBILE PHONE REPAIRING
AIR CONDITIONING
ELECTRONICS



சகல பயிற்சிகளும் செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விபரங்களுக்கு ஆரம்பம் : 16.03.2019

## NEW ASIAN CENTER

NO. 56/15B, STANLEY ROAD, JAFFNA.
T.P : 0212217474, 0778249949 (7955)



# மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

## திரு.சிவராசா நாகதீபன் JP

**(B.Sc, PRT (Agri), PGDE)**



உள்ளக கணக்காய்வாளர் - கிராம அபிவிருத்திச்சங்கம் மல்லாகம் தெற்கு, போசகர்–வளர்மதி சனசமூக நிலையம் கல்லாரை மல்லாகம், ஆசிரியர்–யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்.

அல்லும் பகலும் அயராது பல்வேறு வளர்ச் சித்திட்டங்களை கிராமமட்டத்தில் முன்னின்று நிகழ்த்தியவர். கிராம மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சி பெறவேண்டுமென உழைத்து வருபவர். அறநெறி வகுப்புக்களை கிராம மட்டத்தில் நடாத்தி தமிழர் பாரம்பரியங்களையும்,

விழுமியங்களையும் பேணிக்காத்துவரும் எமது ஆசான் *திரு. சி.நாகதீபன்* அவர்கள் 07.03.2019 ஆம் திகதி அன்று மேல் நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு **அ.பிறேம்சங்கர்** முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீத வானாக சத்தியப்பிரமாணம் பெற்றமையை யிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெறவும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம் தெற்கு,
வளர்மதி சனசமூக நிலையம், கல்லாரை மல்லாகம்.

(7947)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(7954)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

www.StringhopperMachine.com
Email : mo@college.ca (7939)





வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்க்ப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7936)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.